விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 28 செவ்வாய்க்கிழமை (13.09.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 268

ராம்கோ

MADRAS CEMENTS LTD

ஆசியாக் கண்டத்தில் முதலாமிடத்துத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

RAMCO CEMENT

சீமெந்து

# எமது பலத்தை சிதைக்க எதிரிகள் ஊடுருவல்!

## யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி எச்சரிக்கை

(ஞா.ஜங்கரன்)

*எமது இனம் தனது இலட்சியப் பாதையை நோக்கி நகர்ந்து செல்லுகின்ற இச்சூழ் நிலையில், எமது ஒன்றுபட்ட தேசியப்பலத்தை சிதைப்பதற்காக எதிரிகள் எமது மக்கள் மத்தியில் ஊடுருவி நாசகாரிய செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.*



இவ்வாறு நேற்றுக்காலை பளை அரசியல்துறை அலுவலகத்தில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எதிரிகளால் தூண்டப்பட்டு மேற்கொள்ளப் படும் இவ் நாசகாரச் செயற்பாடுகளை உணர்ந்து மக்கள் விழிப்புடன் செயற்படுவதுடன், எதிரியின் இச்செயற்பாடுகளுக்கு துணைபோகின்றவர்களை இனங்கண்டு, அவர்களை முடக்குவதற்கு மக்கள் முன்வர வேண்டும்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி தமிழர் தாயகத்தில் அரச கட்டுபாட்டுப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இப்பகுதிகளில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட போராளிகள் மீது அரசபடைகளும் அரச துணைக்குழுக்களும் தாக்குதல்களை மேற்கொண்டன.

இதனால் பல போராளிகளையும், தளபதிகளையும் முக்கிய அரசியல் பொறுப்பாளர்களையும் இழந்துள்ளோம்.

இத்தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் பல முறை நமது அரசியல் துறைப் பொறுப்பாளர் முறையிட்ட போதும் கண்காணிப்புகுழுவினர் எந்தவித நடவடிக்கையும் எடுக்க வில்லை.

இதனால் எமது போராளிகளின் பாதுகாப்பு கருதி எமது தலைவரின் அழைப்பின் பேரில் எமது தாய (10 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு மீதான இடைக்காலத் தடை நீடிப்பு

(கொழும்பு)

ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்புக்கு எதிராக உயர்நீதிமன்றம் விதித்திருந்த இடைக்காலத் தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. இதன்படி இடைக்கால தடை உத்தரவு எதிர்வரும் நவம்பர்மாதம் 22ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.

அதுவரை பொதுக்கட்டமைப்பிற்கான தடை நீடிக்குமென பிரதமநீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட ஆழிப்பேரலை பொதுக் கட்டமைப்பை ரத்துச்செய்யக்கோரி உயர் நீதி மன்றில் ஜே.வி.பியின் 39 பாராளுமன்ற உறுப்பினர்கள் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நேற்று நடைபெற்றது.

பிரதம நீதியரசர் சரத் என்சில்வா, ராஜா பெர்ணாண்டோ ,நிமல் காமினிஅமரதுங்க ஆகிய மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் இம் மனு மீதான (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜாதிக ஹெல உறுமயவுடனான உடன்படிக்கை இன்றில்லை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திர கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இன்றைய தினம் ஜாதிக ஹெல உறுமயக் கட்சியுடன் செய்யவிருந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடமாட்டார் எனத் தெரியவருகின்றது.

இது குறித்து கருத்து வெளியிட்ட பிரதமர் அலுவலக வட்டாரங்கள், ஏற்கனவே திட்டமிட்டபடி பிரதமர் கண்டி தலதா மாளிகை சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஜாதிக ஹெல உறுமயவினால் முன்வைக்கப்பட்ட 12 கோரிக்கைகள் அடங்கிய பத்திரத்தினைக் கையேற்பார் எனினும் அவர் அதில் கைச்சாத்திடமாட்டார் என தெரிவித்துள்ளன.

ஜே.வி.பியுடன் அவர் செய்து கொண்ட ஒப்பந்தத்தினைக் கண்டித்து இவ்வார முற்பகுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அவருக்கு எழுதிய கடுமையான கடிதமே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-4)

## பிரபாகரனிடம் நான் விருந்துக்கு போகவில்லை ஜனாதிபதிக்கு பிரதமர் மகிந்தராஜபக்ஷ பதில்

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண ஜனாதிபதியும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் நேரடிப்பேச்சுக்களை நடத்தவேண்டுமென்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரபாகரனுடன் நேரடிப்பேச்சுக்கள் நடத்தப்படவேண்டுமென்பதில் நான் மிக உறுதியாக இருக்கின்றேன். அவருடன் காலை உணவோ மதிய உணவோ சாப்பிட நான் போகவில்லையென பிரதமர் தெரிவித்தார்.

ஒற்றையாட்சிக் கோரிக்கையை வைத்துக்கொண்டு பிரபாகரனுடன் பேசப்போனால் ஒரு துண்டு கேக் மட்டுந்தான் சாப்பிட்டு விட்டு திரும்பமுடியுமென்று மகிந்தவிற்கு எழுதிய கண்டனக்கடிதத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் விதமாகவே மகிந்த இக்கருத்தை வெளியிட்டிருந்தார். வடக்கு கிழக்கு மற்றும் சிறுபான்மை மக்கள் என்னை நிச்சயமாக ஏற்பார்கள்.

ஏனெனில் என்னால் மட்டும் தான் சிங்களவர்களை சிறுபான்மை மக்களோடு இணைக்க முடியும் என்று வடக்கு கிழக்கு மக்களுக்கு நன்கு தெரியும்.

பெரும்பான்மை மக்களின் இணக்கம் இல்லாமல் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்பதை சிறுபான்மை மக்களும் முதலில் உணரவேண்டும்.

நான் ஜனாதிபதியானால் நாட்டின் வளர்ச்சிக்காக ஐக்கியதேசியக் கட்சி உள்ளிட்ட அனைத்துக்கட்சிகளையும் அரவணைத்துச் செல்வேன்.

ஜே.வி.பி ,ஜாதிக ஹெல உறுமய உள்ளிட்ட யாருடைய தூண்டுதலின் பேரிலும் நான் இயங்கவில்லை. ஆனால் ஐக்கிய இலங்கையை உருவாக்க இவர்கள் முக்கியமான சக்திகள். சிறுபான்மை முஸ்லிம்களுக்கு உரிய நீதியை எனது ஜனாதிபதி ஆட்சியில் அளிப்பேன். யுத்தமில்லாத நாடுதான் என்கனவு என்றும் பிரதமர் அச் செவ்வியில் தெரிவித் துள்ளார். (ந-4)

## அவசர காலச்சட்டம் இன்றுடன் முடிபு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அனுமதி பெறப்பட்ட அவசரகால சட்ட நடைமுறை இன்றுடன் முடிபுக்கு வருகின்றது.

இந்நிலையில் அவசரகால சட்டம் நீடிக்கப்படுவதற்கான எந்தவித அறிவுறுத்தல்களும் ஜனாதிபதிதரப்பிலிருந்து வெளியாகவில்லை.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டமையினை அடுத்து நாட்டில் 14 நாட்களுக்கு ஜனாதிபதியினால் அவசரகால சட்டம் நடைமுறைக்கு வந்தது.

அது பின்னர் பாராளுமன்ற அனுமதியுடன் இன்று வரை நீடிக்கப்பட்டது. இந்த நிலையில் மீண்டும் அவசரகாலசட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் அதற்கு ஆதரவளிக்கப்போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. (04)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 0777-2349999,
011-2372952-3, 011-2360290,011 - 2360291
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...

எக்ஸ்போ ஏயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

## கலை நிகழ்வு

(பருத்தித்துறை)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் சந்நிதியான் ஆச்சிரம வைச கலை பண்பாட்டுப் பேரவையில் எதிர்வரும் 16ஆம் திகதி "வாழ்வகம்" மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ற-52)

## விசேட அடையாள அட்டை

வடமராட்சி கிழக்கில் கடந்த மாதம் 29ஆம் திகதி பயிற்சியை முடித்து வெளியேறிய ஆழியவளை கிராமமக்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்படுவதுடன் இவர்களை விடுதலைப்புலிகளின் கடறபடையினரின் தேசிய துணைப படையாகவும் அங்கிகரிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் தற்போது பயிற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் சகல கிராம மக்களுக்கும் இந்த சலுகை வழங்கப்படும் என்று இப்பிரதேச பொறுப்பாளர் நிலவன் கூறியுள்ளார். (து-97)

# மஹிந்த - ஜே.வி.பி.ஒப்பந்தத்துக்கு சுதந்திர கட்சி கூட்டணி கடும் எதிர்ப்பு

பிரதமர் ஜே.வி.பியுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தினால் பொ.ஐ.முன்னணிக்கட்சிகள் ஆத்திரமடைந்துள்ளன. சமசமாஜ கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான தத்தமது நிலைப்பாடுகள் தொடர்பாக அவசர கட்டங்களை நடத்திவருகின்றன. கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அடுத்துத் தெரிவித்த அமைச்சர் டியூ.குணசேகர பிரதமர் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை தாம் முற்றாக நிராகரிப்பதாக தெரிவித்துள்ளார். சமசமாஜ கட்சியின் முன்னாள் அமைச்சர் பட்டி வீரக்கோனும் இதே கருத்தையே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தபால் தந்தி அமைச்சர் டீ.எம்.ஜயரத்ன கருத்துத் தெரிவிக்கையில், பிரதமர் ஜே.வி.பி.யுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் சுதந்திரக்கட்சியின், கொள்கைகளைப் பிரதிபலிக்கவில்லை என்றும் சமாதான நடவடிக்கைகள், போர்நிறுத்த ஒப்பந்தம், சுனாமி பொதுக்கட்டமைப்பு என்பன தொடர்பில் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டவைகளை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் கூறியுள்ளார் எரிபொருள் மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேமஜெயநத தெரிவிக்கையில் பிரதமர் ராஜபக்ஷ சுதந்திரக்கட்சியின் சார்பிலோ, பொதுஜன ஐக்கிய முன்னனியின் சார்பிலோ அன்றி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பிலா வெற்றிலை சின்னத்திலே போட்டியிடுகிறார் என வினவினார்.

மஹிந்த ராஜபக்ஷ சார்பில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் மூத்த உறுப்பினர்களான டீ.எம். ஜயரத்ன, சுசில் பிரேமஜயந்த நிமல் ஸ்ரீபால சில்வா, மங்கள சமரவீர, டீ.யூ.குணசேகர ஆகியோரால் தயாரிக்கப்பட்டுவரும் தேர்தல் விஞ்ஞாபனம் பொதுக்கட்டமைப்பு, போர்நிறுத்த ஒப்பந்தம், சமஷ்டி தீர்வு என்பனவற்றை உள்ளடக்கியதாகவே இருக்கிறது என்று டீயூ.குணசேகர தெரிவித்தார். மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தப்படி பொதுக கட்டமைப்பை கைவிடுதல் ஒற்றையாட்சி முறையை ஏற்றுக்கொள்ளுதல், போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்தல், நிறை வேற்று ஜனாதிபதி முறையை ஒழித்தல், உள்ளக சுயநிர்ணய உரிமையை இறுதித தீர்வுக்காக எடுத்தாராயா திருத்தல் திறந்த சநதைப் பொருளாதாரத்தை நிராகரித்தல் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. (து-6)

# ஐ.நா.செயலாளர் நாயகமானால் அமெரிக்காவின் நல்லுறவைப் பேணுவேன் ஜயந்த தனபால தெரிவிப்பு

ஐ.நா.சபையின் அடுத்துவரும் செயலாளர் நாயகம் ஐ.அமெரிக்காவுடன் நெருக்கமான உறவுகளைப பேணுபவராகவும், முகாமைத்துவ திறன்கள் மட்டுமன்றி உள்ளக சீர்திருத்தங்கள் உட்பட்ட நிர்வாகத் திறன்கள் மிக்கவரா்கவும் இருத்தல் அவசியம் என்று இலங்கையின் சார்பில் செயலாளர் நாயகம பதவிக்கு போட்டியிடுபவரான ஜயந்த தனபால அமெரிக்க பத்திரிகையொன்றிற்கு தெரிவித்துள்ளார். அடுத்த வாரத்தில் ஏற்றுக்கொள்ளப படவிருக்கும் ஐ.நா.சீர்திருந்தங்களை அடுத்து பதவிவகிக்கப் போகும செயலாளர் நாயகமே அமுல் படுத்துபராயிருப் பார் அத்தகையவர் தொழில்நுட்ப ரீதியில் முகாமைத்துவத்தையும், சீர்திருத்தங்களையும் நேரில் கவனிக்கத்தக்க ஒருவராகவே இருத்தல் வேண்டும். ஐ.நா ஒரு சிக்கலான அரசியல் நிறுவனம். அதனை நிர்வகிப்பவர் முகாமைத்துவ திறன்களை மட் டும் கொண்டிருத்தல் போதாது. நிர்வாக மற்றும அரசியற் திறக்களையும் கொண்டிருப்பவராயிருத்தல் வேண்டும். தான் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் ஈராக் போர் காரணமாக ஐ.நா.வுக்கும் அமெரிக்காவுக குமிடையே ஏற்பட்ட விரிசல்களை திருத்தி அமைப்பேன் என்றும், ஐ.நாவுக்கும் அமெரிக்காவுக்கு மிடையே ஒத்திசைவான உறவுகள் உள்ளன என்பதில சந்தேக மில்லை என்ற போதிலும் ஐ.நாவுக்கு அமெரிக்க ஒத்துழைப்பு இன்றியமையாத ஒன்று என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து-6)

# சந்திரிகா–மஹிந்த இடையே பூசல் எதுவும் இல்லையாம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஷபக்ஷவிற்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் இடையே முரண்பாடுகள் எதுவும் இல்லையென அமைச்சரவைப் பேச்சாளர் நிமால ஸ்ரீபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

பரணகம என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷவிற்கும் ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் இடையே முரண்பாடுகள் இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியே பரப்புரைகளைச் செய்து வருகின்றனர். இதில் எதுவித உண்மையில்லையெனத் தெரிவித்தார். (த-4)

# கதிர்காமர் கொலையில் விடுதலைப்புலிகள் தொடர்பு வெளிவிவகார அமைச்சு தூதரகங்களுக்கு அறிவிப்பு

முன்னாள் வெளிவிவகார அமைசசா லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பாக மேலதிக துப்புக்கிடைதிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். கதிர்காமர் கொலை செய்யப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரும் அதே இடத்தில் வைத்து அதே முறையில் கொலை செய்வதற்கு எடுத்த முயற்சி தோல்வியில் முடிவடைந்ததாக பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைக்குப் பின்னணியில் தமிழீழ விடுதலைப்புலிகள் இருப்பதாக குறிப்பிடப்பட்டு இரகசியப் பொலிஸாரினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் பிரதிகள் வெளிவிவகார அமைச்சினால் வெளிநாட்டு தூதரகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## இராசி பலன்

**13.9.2005**
**(ஆவணி 28, செவ்வாய்க்கிழமை)**
**தசமி முன்னிரவு 8.12 மணிவரை**
**பூராடம் முன்னிரவு 8.25 மணிவரை**
**இராகுகாலம் 3.03 - 4.33 மணிவரை**
**சுபநேரம் 10.33 -12.03 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | சரீரப் பிரயாசை, எதிர்பாராத செலவு, காரிய தாமதம், கட்டுப்பாடு. |
| இடபம் | காரிய இடையூறு, போசன சுகம், வாகன பயம், உறவினர் வெறுப்பு. |
| மிதுனம் | குடும்ப மகிழ்ச்சி, உறவினர் வருகை, எடுத்த காரியம் கைகூடும், கீர்த்தி. |
| கடகம் | செலவாக்கு, போசன சுகம், தொழில் நன்மை, பிறர் உதவி. |
| சிங்கம் | புத்திரால் கவலை, வேலைச்சுமை, காரிய இடையூறு, தனவிரயம். |
| கன்னி | மாதா சுகம், கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம், பணவிரயம். |
| துலாம் | சகோதரர் உதவி, வாகன சுகம், நல்ல வரவேற்பு, தொழில் நன்மை. |
| விருச்சிகம் | கோபமடைதல், தொழில் மந்தநிலை, தன விரயம், சிந்தனை மிகுதி. |
| தனுசு | நல்ல முயற்சி, நல்லசெய்தி, பெரியோர் சந்திப்பு, போசனசுகம். |
| மகரம் | காரிய அலைச்சல், உறவினர் வெறுப்பு, தனவிரயம், கௌரவக்குறைவு. |
| கும்பம் | தனவருவாய், பிறர் உதவி, செய்தொழில் நன்மை, புதிய விடயம். |
| மீனம் | தூரதேசச் செய்தி, அதிகப் பிரயாசை, நண்பர்கள் உதவி, காரிய நன்மை. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

\- வளவன்

# வானிலையை மாற்றும் எரிமலைகள்

ஒருநாட்டில் எரிமலை வெடிக்கும் போது ஏற்படும் சூழல் அந்த பகுதியில் வானிலை மற்றும் தட்ப வெப்ப நிலையில் தீவிரமான மாறுதல்களை ஏற்படுத்துகின்றன என நாசா மற்றும் நேஷனல் சயின்ஸ் ப்வுண்டேஷன் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

புவிக்கடியில் உருகிய நிலையில் உள்ள பாறைக் குழம்பே வால்கனேஸ் எனப்படும் எரிமலைகள் உருவாகக் காரணமாகும் இந்த பாறைக்குழம்புகள் புவியின் மேற்பதரப்புக்கு வருவதாலே எரிமலைகள் ஏற்படுகின்றன. இவை வரும் வழிகள் வட்டவடிவ பள்ளங்களாகவோ நீண்ட வெடிப்புகளாகவோ இருக்கும். எரிமலை வெடிப்பிற்குப் பின்னர் எரிமலைக் கக்கல் நடைபெறுகின்றது. எரிமலைக் குழம்பு படியும் இடம் செழிப்பாக இருக்கும் என கூறப்படுகிறது.



இந்த எரிமலைக்குழம்பு தீவிரமாக வெளிவந்தால் புவிபரப்பில் இருந்து 10மைல் தூரத்தில் உள்ள வளிமண்டலத்தைப் பாதிக்கின்றன. இந்த எரிமலைக் குழம்பில் கூழ்ம வகைப் பொருளான ஏரோசால்கள் காணப்படுகின்றன.

இந்த ஏரோசால்களில் கந்தகடை ஆக்சைடு உள்ளன. இந்த கந்தகடை ஆக்சைடு நீராவியுடன் வினை புரிந்து வானிலை மற்றும் தட்பவெப்ப நிலையைக் கட்டுப்படுத்தும் திறனைப் பெற்றுள்ளன. வால்கனாலஜி எனப்படும் எரிமலையை ஆராயும் துறை தற்போது வானிலை மற்றும் தட்பவெப்பநிலைகளை ஆராயும் துறையுடன் கூட்டாக இணைந்து செயல்படுகின்றது. (ற)

# கலந்துரையாடல்

தென்மராட்சி பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் இராசேந்திரம் தர்மிகாவின் தலைமையில் பெண்கள் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை 3.00 மணியளவில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட அனைவரும் தவறாது பங்கு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (அ)


## தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு



**இன்று பத்தாம் திருவிழா**

**துர்க்கா அபய வீடவள்**

துன்ப மற்றவள் துர்க்கா தூரிய வாழ்பவள்
துறையு மானவள் இன்பத் தோணி பானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தாங்கிட என்னுள் நடக்கும்துர்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

**நாட்டினைக் காப்பாற்றம்மா**

தெல்லியில் இருந்து இந்தத் தேசத்தை ஆளும்தேவி
வல்வினை போக்கும் தாயே வடிவழகே என்று ஏத்தி
அல்லும் பகலும் இங்கே அழுதுணை வேண்டுவோர்க்கு
நல்லதோர் தீர்வைத்தந்து நாட்டினைக் காப்பாற்றம்மா

கவிமணி அன்னை தாஸன்

# ஜே.வி.பி- மஹிந்த ஒப்பந்தம் புலிகளை தனியரசுக் கோரிக்கைக்கு தள்ளிவிடும்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டைப் பிரிக்காமல் ஐக்கிய இலங்கைக்குள் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதே தனது பிரதான நோக்கம் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

களனி சிறி கல்யாணி ரஜமகாவிகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட சமய வழிபாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நாடு பிளவுபடாமல் ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளே நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்துவது எனது குறிக்கோள். வெவ்வேறு இனம், சாதி எனப் பிளவுபடாமல் அனைவரும் ஒரே இனம் என்ற அடிப்படையில் ஒன்றுபட வேண்டும்.

வெவ்வேறு சமயங்களைப் பின்பற்றுவோர் தத்தமது சமய அனுஷ்டானங்களை மேற்கொள்ளும் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.

வறுமையில் வாடும் மக்களின் வறுமை கொடும் பசி, விரக்தி ஆகியவற்றை அடியோடு ஒழிக்கும் நடவடிக்கைகளை நான் முன்னெடுப்பேன்.

அதுபோல இலங்கையை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுக்கும் நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

பொலநறுவையிலிருந்து களனிவரை தெற்கு முழுவதும் நாட்டை வளப்படுத்திய பராக்கிரம பாகுவின் காலத்தை ஒத்த வளமான நாட்டை நான் மீண்டும் உருவாக்குவேன் என அவர் மேலும் தெரிவித்தார்.


இதேவேளை, அம்பாந்தோட்டை திஸ்ஸ மகாரமயில் ஐ.தே.கட்சியினர் மத்தியில் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றும்போது,

ஜே.வி.பி, மஹிந்த ராஜபக்ஷ ஒப்பந்தத்தால் தமிழீழ விடுதலைப்புலிகள் தனியரசுக் கோரிக்கைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார். தமிழீழ விடுதலைப்புலிகள் கூட்டாட்சி அடிப்படையிலான தீர்வுக்கு இணக்கம் தெரிவித்துள்ள நிலையில் ஜே.வி.பி,மஹிந்த ஒப்பந்தமானது தமிழீழ வடுதலைப் புலிகளின் தனியரசுக் கோரிக்கையை மீளவும் கட்டியெழுப்புவதற்கு வழிசமைத்துவிடும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆதரிக்கிறார். ஆனால் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ அதை மாற்ற முயற்சிக்கிறார்.

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக் கட்டமைப்பை பாராளுமன்றத்தில் ஆதரித்துப் பேசிய மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பியின் தூண்டுதலால் இப்போது எதிர்த்துப் பேசித் தனது இரட்டை நிலைப்பாட்டை மேற்கொண்டு வருகிறார். இது நாட்டை மீண்டும் யுத்தப் பாதைக்கு அழைத்துச் செல்ல வழிவகுக்கும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அமைதி முயற்சிகள் அனைத்துக்கும் ஐ.தே.க. முழு ஆதரவளித்தது. சில்லறைத்தனமான அரசியல் இலாபங்களைப் பெற ஐ.தே.க. விரும்பவில்லை.



நாட்டில் நிலையான அமைதி நிலவ வேண்டும் என்பதில ஐதேக முழுமையாக அக்கறை கொண்டுள்ளது.

ஐ.தே.க ஆட்சியை பொறுப்பேற்றவுடன் மக்களின் வாழ்க்கைச் செலவினத்தைக் கட்டுப்படுத்துவதுடன் இன்னமும் தற்காலிக முகாம்களில் வாழ்ந்துவரும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தேவையான உதவிகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (து-4)

# சவால்களுக்கு முகம் கொடுக்க தயாராகின்றார் பிரதமர்

(கொழும்பு)

நாட்டில் வெற்றிகொள்ள வேண்டிய பல்வேறு சவால்கள் இருப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் எவ்வாறு சமாதானத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற சவால் உள்ளது. அதேபோன்று தெற்கிலும் பல்வேறு சவால்கள் இருப்பதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சவால்களை வெற்றிகொண்டு நாட்டை அபிவிருத்தி செய்வதே தனது எதிர்பார்ப்பாகும்

மறுபுறம் இளைஞர்,யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினை, அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவு உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படுவது அவசியம் என்று தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் உற்பத்திகளுக்கு உரிய விலையைப் பெற்றுக்கொடுப்பது,சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களின் தொழில்த்துறையை முன்னேற்றுவது போன்ற விடயங்களைக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (த-9)

# தலைமைத்துவத்தில் முக்கியத்துவம் பற்றி

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

ஒரு நாட்டினதோ அமைப்பினதோ அல்லது நிறுவனத்தினதோ முன்னேற்றம் அதன் தலைமைத்துவத்திலேயே தங்கியிருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரீபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஒரு கட்சியின் தலைமைத்துவத்தின் அடிப்படையிலேயே அந்தக் கட்சியின் செயற்பாடுகள் அமையும். இந்தச் செயற்பாடுகள் சரியான முறையில் முன்னெடுக்கப்படும் போது தான் அந்தக் கட்சி முன்னேற்றப் பாதையில் செல்லும் என்றார் அவர்.

அளவை நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொணடு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு நாட்டின் அரசியல் யாப்பின் கொள்கைகள் எவ்வாறு இருப்பினும் தலைமைத்துவம் செயற்படும் முறையிலேயே அது முன்னெடுக்கப்படும்.

சமூகம்,ஜனநாயகம் என்பன தொடர்பாக அரசியல் அமைப்பில் தெளிவு படுத்தப்பட்டிருப்பின் தலைமைத்துவம் செயற் படும் விதத்திலேயே அவை பாதுகாக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து-8)

# சகல முஸ்லிம்களின் கருத்தறிந்த பின்பே ஜனாதிபதித் தேர்தல் பற்றி முடிவு எடுப்போம்

## பஷீர் சேகுதாவுத்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் உடனடியாக அவசரப்பட்டு எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கப்போவதில்லை எனக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பஷீர் சேகுதாவுத் தெரிவித்தார்.

நாட்டின் பல பிரதேசங்களிலுள்ள முஸ்லிம் மக்களைக் கேட்டறிந்த பின்னரே இது தொடர்பாக இறுதித் தீர்மானத்தை கட்சியின் தலைமைத்துவம் எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஏறாவூர் அரபா வித்தியாலய மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் மக்கள் யாரை ஆதரிக்கவேண்டும் என்பது தொடர்பாக மக்களின் கருத்தறியும் நடவடிக்கைகளில் முஸ்லிம் காங்கிரஸ் தற்போது ஈடுபட்டு வருகின்றது.

வடக்கு மாகாண முஸ்லிம்கள், கிழக்கு மாகாண முஸ்லிம்கள்,வடகிழக்கிக்கு வெளியே வாழும் முஸ்லிம்கள், முஸ்லிம் புத்திஜீவிகள், கல்விமான்கள் மற்றும் பல்கலைக்கழக முஸ்லிம் அறிஞர்கள் ஆகியோரின் கருத்துக்களை கேட்டறிந்த பின்னரே முஸ்லிம் காங்கிரஸ் தனது தீர்மானத்தை வெளியிடும் என்று பஷீர் சேகுதாவுத் மேலும் தெரிவித்தார். (த-9)

# இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட்டால்

# சிங்கள,முஸ்லிம் மக்களுக்கு பேரிழப்பு ஏற்படும்

## அமைச்சர் பேரியல் அஷ்ரப் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து நாட்டு மக்களிடம் பல்வேறு கருத்துக்கள் நிலவுவதாக வீடமைப்பு கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடியான சூழ்நிலையில் ஜனாதிபதித் தேர்தல் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த நிலையில நாட்டு மக்கள் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பலவிதமான கருத்துக்களைக் கொணடுள்ளார்கள்.

ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி மாத்தறையில் நேற்று முன்தினம் நடாத்திய கூட்டமொன்றில் கல்ந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அனைவரும் எதிர்நோக்கும் பிரச்சினையே ஜனாதிபதித் தேர்தலாகும்.இதுகுறித்து பல்வேறு நிலைப்பாடுகளும் கேள்விகளும் மக்கள் மத்தியில் காணப்படுகின்றன.

இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டியிருப்பதோடு உண்மையான சமாதானத்தை ஏற்படுத்த வேண்டிய தேவையுமிருக்கிறது.

நாட்டில் தற்போது நிலவும் முக்கிய பிரச்சினைகளில் வடக்கு-கிழக்கு பிரச்சினை முக்கிய இடத்தைபப் பெறுகின்றது. இந்த நிலையில வடக்கு-கிழக்குக்கு தற்செயலகவேனும் இடைகால நிர்வாகமோ அல்லது வேறு நிர்வாக முறையை வழங்கியோ நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்ல முடியுமென்று நினைப்பார்களாயின் அதன்போது கிழக்கு மாகாணத்தை சேர்ந்த சிங்கள மக்களும் முஸ்லிம் மக்களுமே அதிக அளவு இழப்புகளை சந்திப்பார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (து-8)

# விளையாட்டுத்துறை பிரதி அமைச்சருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

தனது அனுமதியில்லாமல் விளையாட்டுத் துறை பிரதியமைச்சர் ஸ்ரீபதி சூரியாராச்சி கூட்டமொன்றை நடாத்தியமை தொடர்பாக அவருக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென அவருக்குக் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவரும் அமைச்சருமான அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

கிரிபத்கொடையில் நடாத்தப்பட்ட நீதிபதி சூரியாராச்சியின் கூட்டத்துக்கு கட்சியின் சிரேஷ்ட தலைவர் என்ற முறையில் தம்மிடம் எந்த வித அனுமதியும் பெறப்படவில்லை என்றும்குறிப்பிட்டசுட்டத்தில் தானும்கலந்துகொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் இந்தக் கூட்டத்துக்கு தனது அனுமதியில்லாமல் தனது பெயர் உபயோகிக்கப்பட்டிருக்கிறது என்றும் இவை தொடர்பாக ஸ்ரீபதி சூரியாராச்சிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க தீமானிக்கப்பட் டிருக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து-8)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக அரசாங்க ஊழியர் இடமாற்றம்

(கொழும்பு)

அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அரசாங்க ஊழியர்களை இடமாற்றம் செய்வதற்கான வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் அதிகாரிகள்,பொலிஸ் உயர் அதிகாரிகள் ஆகியோருக்கே இந்த இடமாற்றங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுதொடர்பாக பொலிஸ் ஆணைக்குழுவிடம் முறையிட தமது கட்சி நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் குறித்து பொலிஸ் ஆணைக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இதுகுறித்து ஆராயும் பொருட்டு அடுத்தவாரம் தாமும் தமது கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியாவும் பொலிஸ் ஆணைக்குழுவை சந்திக்கவுள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

# மின்சார விநியோக விஸ்தரிப்புக்கு நிக்கொட் ரூ.26.5 மில்லியன் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள 30 கிராமங்களின் குறிப்பிட்டளவு பிரதேசத்திற்கு மின்சாரத்தினை தொடர்ந்து வழங்குவதற்கு நிக்கொட் திட்டத்தின் ஊடாக கடந்தவாரம் யாழ்ப்பாணம் மின்சார சபைக்கு 26.5 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.

இவ் 30 கிராமங்களும் தென்மராட்சி,கோப்பாய், தெல்லிப்பழை,கரவெட்டி ஆகிய பிரதேசங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே இவ் 30 பிரதேசங்களுக்கும் மின்சாரசபையினால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும் மின்சாரம் வழங்கப்பட்ட இடத்தில் இருந்து மேலும் குறிப்பிட்டளவு பிரதேசத்துக்கு மின்சாரத்தினை விஸ்தரித்து வழங்குவதற்காக நிக்கொட் திட்டத்தின் மூலம் இத்தொகை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-19)

# உதவி மருத்துவர்களின் வேலை நிறுத்தம் பேச்சுவார்த்தை வெற்றியளிக்கவில்லை

(கொழும்பு)

பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி மருத்துவ உத்தியோகத்தர்களின் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பலன் அளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ உத்தியோகத்தர் சங்கத்தின் பிரதிநிதிகள் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்துடன் நடத்திய கலந்துரையாடலில் எதுவிதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று சங்கத்தின் தலைவர் டாக்டர் டிலின குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்த வேலை நிறுத்தத்தினால் நோயாளர்கள் எதிர்கொள்கின்ற சிரமங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடமைகளை பகிஷ்கரிக்கும் உத்தியோகத்தர்களின் மருத்துவமனைகளுக்கு மாற்று வைத்தியர்கள் அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

# இலவச சீருடை விநியோகம் அடுத்த மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

இலவச பாடசாலை சீருடை விநியோகம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும். டிசம்பர் மாத விடுமுறைக்காக பாடசாலைகள் மூடப்படுவதற்கு முன்னர் சீருடை விநியோகத்தைப் பூர்த்தி செய்வதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

காற்சட்டைகள்,சேட்வகைகள் பௌத்த பிக்குமாருககான அங்கிகள்,முஸ்லிம் மாணவிகளுக்கான பர்தா துணிகள் ஆகியனவும் விநியோகிக்கப்படவுள்ளன.

இவற்றிற்காக 120 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது. சீருடைகள் அனைத்துமே உள்ளூர் புடவை உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படுவது இந்த வருட சீருடை விநியோகததில் இடம்பெறும் முக்கிய அம்சமாகும்.

நாட்டில் 92 வலயக்கல்வி அலுவலகங்கள் மூலமாக சீருடை விநியோகங்கள் இடம்பெறவுள்ளது. (ற-7)

# அன்புள்ள அம்மா!

2

## உயிரின் உதயம்

பெண்களில் குழந்தை தங்கி வளர்வதற்காக உடலில் முக்கியமாக 3 உள்ளுறுப்புக்கள் இடுப்புக்குழியினுள் அமைந்துள்ளன.

1. கருப்பை (uterus/womb)
2. முட்டைப்பை/சூலகம் (ovaries)
3. பலோப்பியன் குழாய்கள் (Fallopian Tubes)

கருப்பை தசையாலான சிறிய தோடம் பழம் அளவிலான உறுப்பு. ஆனால் குழந்தை தங்கி வளரும்போது 4 கிலோ குழந்தை



யையும், உள்ளடக்குமாறு பெருக்கும் வல்லமை படைத்தது. இதன் கீழ்ப்பகுதி கருப்பைக் கழுத்து (cervix). வெளியே யோனியுடன் தொடர்பைக் கொண்டிருக்கும்.

கருப்பையின் இருபுறமும் முட்டைப் பைகள் இருக்கின்றன. முட்டைப் பைகளிலிருந்து பலோப்பியன் குழாய்கள் முட்டையையும் கருக்கட்டிய முட்டையையும் கருப்பைக்குள் எடுத்துச் செல்லும்.

பருவமடைந்த காலம் முதல் மாதா மாதம். முட்டைப் பையிலிருந்து முட்டை வெளிவரும். இம்முட்டை பலோப்பியன் குழாயினுள் உள்ளீர்க்கப்பட்டு கருக்கட்டலுக் காகக் காத்திருக்கும். கருக்கட்டிய முட்டை அதாவது கரு. பதிவதற்காக கருப்பையின் அகவணி, மெத்தை போன்ற குருதிக்கலன் படையொன்றை உருவாக்கும். கருக் கட்டல நிகழாத பட்சத்தில் இவ் அகவணி அழியும். இதன்பொழுது குருதியும், அகவணியும் வெளியேறும். இதனையே மாத சுகவீனம் எனக் கூறுவர்.

முட்டை வெளியேறும் செயன்முறை மாத சுகவீனம் நிகழ 14 நாட்கள் முன்னதாக நிகழும். இந்நாளுக்கு அண்மித்ததாக உடலுறவு நிகழுமாயின் கருக்கட்டலுக்கான சாத்தியம் அதிகமாகும்.

யோனியிலிருந்து விந்துகள் சுய அசைவு மூலம் பலோப்பியன் குழாயை அடைந்து அங்குள்ள முட்டையுடன் கருக்கட்டும். இந்த நிகழ்வின்போது ஒரு விந்து மட்டுமே முட் டைக்குள் உட்புகும்.

கருக்கட்டிய முட்டை பிரிவடைந்து பல கலநிலையை அடைந்து கருப்பையை நோக்கி நகர ஆரம்பிக்கும். கருப்பையை சென்றடைந்த கரு அங்கு தனக்கென உருவான மெத்தையில் பதியும்.

உங்களுக்கு வயிற்றில் குழந்தை தங்கியிருப்பதற்கான முதலாவது அறிகுறி உங்களது மாத சுகவீனம் குறிப்பிட்ட திகதிக்கு வழமைபோல் வராமல் போவதாகும். ஆனால் நீங்கள் கர்ப்பம் தங்கியிருக்கிறீர்களா என அறிய மிகச் சிறந்த வழி.

உங்கள் சிறுநீரை பரிசோதிப்பதாகும். உங்கள் மாதவிடாய் 10 நாட்களிற்கு மேலாக பின் தள்ளிப்போனால் இப் பரிசோதைனையை மேற்கொள்ள முடியும்.

**கர்ப்பத்திற்கான ஏனைய அறிகுறிகள்**

1. மார்பகங்களில் வலி
2. குமட்டல்
3. களைப்பு
4. சிறிதளவு குருதிப்போக்கு
5. அதிகளவு உமிழ்நீர் சுரப்பு

(நாடி பிடித்து கர்ப்பம் என சொல்ல தமிழ் சினிமா வைத்தியர்களுக்கு மட்டும் தான் முடியும்).

**பிரசவ திகதியை கணிப்பது எப்படி**

பெண்களில் சராசரி கர்ப்பகாலம் 280 நாட்களாகும். இதன் அப்படையில் திகதி பின்வருமாறு கணிக்கப்படும்.

கடைசியாக மாதவிலக்கு தொடங்கிய திகதி + 7நாட்கள் + 9 மாதங்கள்

உதாரணம் - கடைசியாக மா.வி.தொ. திகதி 01.02.03 (LMP) பிரசவ எதிர்பார்ப்பு திகதி 08.11.03 (EDD)

மாதவிலக்கு ஒழுங்கற்று இருப் போருக்கு இது பொருந்தாது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஸ்கான் (Scan) மூலம் குழந்தையை எதிர்பார்க்கும் பிரசவ திகதியை அண்ணளவாகக் கணிக்கலாம்.


### ஆரம்ப கர்ப்பகாலம்

**ஆரம்ப கால கர்ப்பத்தில் கவனிக்க வேண் டியன எவை?**

**உணவு**

நீங்கள் இருவருக்காக உணவை உட்கொள்ள வேண்டியுள்ளதால் சமநிலைப்படுத்தப்பட்ட உணவை உட்கொள்ளுதல் அவசியம். உங்கள் குழந்தையின் உள்ளுறுப்புக்கள் சீராய் அமைவதற்கும் அதன் எதிர்காலம நோய்களற்றதாக இருப்பதற்கும் ஊட்டச்சத்துள்ள உணவு அவசியம். சத்துக்குறைபாடு உடைய தாய்மாருக்கு நிறை குறைவான குழந்தைகள் பிறக்கும் சாத்தியம் அதிகம். கர்ப்பகாலத்தில் மேலதிகமாக 350 கலோரி உணவு தேவைப்படுகிறது.

**கர்ப்பிணித் தாய்மாருக்குரிய உணவுகள் எவை?**




1. பழவகைகள், காய்கறி, கீரைவகை (எந்தப் பழமும் உண்ண முடியும். பப்பாசி, அன்னாசி உட்பட)
2. தானிய உணவு, சோறு பாண்
3. பால் தயிர், யோகட்
4. கோழி இறைச்சி, மீன், முட்டை, பருப்புவகை.

மேற்கூறிய 4 உணவு வகைகளிலிருந்தும் ஒரு வகையாக 4 வேறு விதமான உணவுகள் சேர்க்கப்படுவது சிறந்தது.

பொதுவாக, கொழும்பு, உப்பு சத்துக்கள் குறைவாக பாவிப்பது நல்லது. எண்ணெய் பாவிக்கும் பொழுது (நிரம்பிய கொழுப்பு வகை) நல்லெண்ணை விரும்பத்தக்கது. மாமிசம், மீன் உட்கொள்ளாத தாய்மார் மேலதிகமாக பால், பருப்பு வகைகளை உட்கொள்ள வேண்டும்.

கர்ப்பகாலத்தில் மலச்சிக்கலைத் தவிர்க்க குறைந்தது 10-12 கிளாஸ் நீர் அருந்துதல் அவசியமாகும்.

**கனியுப்புக்களும் விற்றமின்களும**

**இரும்புச்சத்து (Iron)**

உடலில் இரத்தக்கலங்களிற்கு இது அத்தியாவசியமாகும். இதன் தேவை கர்ப்ப காலத்தின் போது பன்மடங்காக அதிகரிப்பதால் கர்ப்பிணித் தாய்மாருக்கு இரத்தச் சோகை ஏற்படுகிறது. இதனைத் தடுப்பதற்கு எல்லாக் கர்ப்பிணத் தாய்மாருக்கும் இரும்புச்சத்து குளிசைகள் அரசாங்க கிளினிக்கில் இலவசமாக வழங்கப்படுகிறது. கீரை வகை, மற்றும் ஈரல் போன்ற உணவு வகைகளிலும் இரும்புச்சத்து காணப்படுகிறது.

**போலிக்கமிலம்**

இது குழந்தைகளில் நரம்புத் தொகுதியில் ஏற்படும் குறைபாடுகளைத் தவிர்க்க உதவுகிறது இவ்வுயிர்ச் சத்து

1. பச்சைக்காய்கறி
2. தோடம்பழம், பச்சை போஞ்சி

போன்ற உணவு வகைகளில் கிடைக்கிறது.இதுவும் வில்லை வடிவில் தாராளமாகக் கிடைக்கின்றது.

**கல்சியம் (Calcium)**

குழந்தைக்குத் தேவையான கல்சியம் தாயிலிருந்தே பெறப்படுவதால் இதை ஈடு செய்ய கல்சியம் நிறைந்த உணவுகளை (சிறிய மீன்வகை, பால்) உட்கொள்ளல் அவசியமாகும்.

இவற்றைவிட அயடீன்,நாகம் என்பனவும் கர்ப்பிணிகளிற்கு இன்றியமையாததாகும்.

அளவுக்கு மிஞ்சிய அமிர்தம் நஞ்சாவது போல் விட்டமின்களும் வைத்தியரின் ஆலோசனையின்றி பெறுதல் தீங்கு விளைவிக்கும் செயலாகும். உதாரணமாக அளவுக்கு மிஞ்சிய விட்டமின் A குழந்தையின் வளர்ச்சியையும் உடல் உறுப்புகளையும் பாதிக்கலாம்.

**தவிர்க்கப்பட வேண்டிய உணவுகள் எவை?**

1. அதிக கொழுப்பு உள்ள உணவுகள்
2. அதிக தேநீர் கோப்பி
3. நன்கு அறியப்படாத மூலிகை மருந்துகள்
4. ஒவ்வாமை உணவுகள் (Allergic foods)

**வைத்திய கலாநிதி சி.நவநீதன்**

5. நன்கு சமைக்காத உணவுகள் (உ+ம்-பால், சலாட் வகைகள்)

**குங்குமப்பூ சாப்பிடலாமா?**

உங்கள் குழந்தையின் உடல் நிறம் தாய், தந்தையின் மரபணுக்களால் மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது. எனவே நீங்கள் உட்கொள்ளும் உணவு உங்கள் குழந்தையின் நிறத்தை மாற்றும் என எண்ணுவது வீணாகும். ஆனால் நீங்கள் உட்கொள்ளும் சத்துள்ள உணவுகள் உங்கள் குழந்தையை ஆரோக்கியமானதாக்கும்.

**ஏனைய தவிர்க்க வேண்டிய விடயங்களை**

1. X கதிர் பரிசோதனை
2. மதுசாரம் உள்ள பானங்கள்
3. நச்சு வாயுக்கள்
4. தவறான மருந்துப் பாவனை
5. அதிகளவு புகை. உங்கள் கணவரின் புகைத்தல் உங்களையும் குழந்தையையும் பாதிக்கும். நுளம்புத்திரிப் புகையும் ஆபத்தானது.

(நாளை தொடரும)

# நேரடி விவாதத்திற்கு வருமாறு மஹிந்தவுக்கு ரணில் அழைப்பு

ஐக்கிய தேசியக்கட்சியின், ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தம்முடன் நேரடி விவாதத்திற்கு வருமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

எனினும் இதனைப் பிரதமர் ஏற்றுக் கொள்ளவில்லை என கொழும்பு ஊடகம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது. நாட்டின் பொது விடயங்கள் மற்றும் ஜனாதிபதியினால் கைச்சாத்திடப்பட்ட பொதுக் கட்டமைப்புக்கு எதிரான பிரதமமந்திரியின் நடவடிக்கைகள் ஆகியவை தொடர்பிலேயே இவ்விவாதம் கோரப்பட்டது.

அத்துடன் ஜே.வி.பியுட்னான தனது உடன்படிக்கை பற்றி வருகின்ற எத்தகைய சவால்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று பிரதமருக்கு அறிவுறுத்தப்படவுள்ளதாக ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை தான் விவாதத்தில் கலந்து கொள்ள வருமாறு ரணில் விக்கிரமசிங்கவை அழைத்தாகவும் ரணில் அதனை நிராகரித்ததாகவும் ஊடகங்களுக்கு அறிவிக்கும்படி பிரதமருக்கு அவரின் பிரச்சாரக்குழு அறிவுத்தியுள்ளது. (த-4,6)

# விண்ணப்பம் கோரல்

விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் மாவட்ட விலை மதிப்பீட்டாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும், சிறந்த நற்குணமும் நல்ல கண் பார்வையும் உடல்நலமும் உள்ளவராக இருக்கவேண்டும், 2005.09.30 ஆம் திகதியன்று 20வயதிற்கு குறையாதவராகவும் 35வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் பெருந்தோட்ட முகாமையும் மதிப்பிடலும் என்ற பட்டப்ப்டிப்பில் 1ஆம் அல்லது 2 ஆம வகுப்பில் பெறப்பட்ட சிறப்புப்பட்டம் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் ரோயல் இன்ஸ்டியூட்டின் பொது பயிற்சிப் பிரிவில் இறுதிப பரீட்சையில் சித்தி அல்லது ஒருங்கிணைகப்பட்டவிலை மதிப்பீட்டாளர்களினதும் ஏல விற்பகையாளர்களினதும் சங்கத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 2005.09.30 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்சு செயலகம், கொழும்பு-1 என்ற விலாசதத்திற்கு பதிவு தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பம் தொடர்பான மேலதிக விபரங்களை 2005.09.09 அன்று வெளியான இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடவும். (த-19)

# சிறப்பான முறையில் நடைபெறும் தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளிக்கிழமை முதல் முகமாலையில் இடம்பெற்றுவரும் தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு சிறப்பான முறையில் நடைபெற்று வருவதாக நேரடியாக அங்கு சென்றவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இதற்கெனவே அமைக்கப்பட்ட பிரமாண்டமான சிறப்புக் கொட்டகை ஒன்றில் மீளளிப்புகள் வழங்கப்படுவதாகவும் இக் கொட்டகை விசாலமானதாகவும், நீர்வசதி, மலசலகூட வசதிகள் நிறைந்ததாவும் இருப்பதோடு கொட்டகையினுள் மின் விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளதோடு, நிதியை மீளப்பெறச் செல்பவர்கள் வசதியாக அமர்வதற்கான இருக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அங்கு செல்பவர்கள் அன்புடனும் கௌரவமாகவும் நடத்தப்படுவதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கிறார்கள்.

சிற்றுண்டியுடன் குளிர்பானமும் இலவசமாக வழங்கப்படுவதோடு, முகமாலையிலிருந்து இராணுவ காவல்நிலையம் வரை இலவச போக்குவரத்துச்சேவையும் நடத்தப்படுகிறது.

கடந்த 9ஆம் திகதி ஆரம்பமான இந்த மீளளிப்பு 21ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும். இக்கால எல்லைக்குள் கடனை மீளப்பெறும் உரிமையுடையவர்கள் உரிய ஆவனங்களுடன் எத்தினத்திலும் சென்று தமக்குரிய பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட பெண்களை ஆற்றுப்படுத்தும் முகமாக அரங்க செயற்பாட்டுடனான கருத்தரங்கு இன்று தீருவில், வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள சலாம் முன்பள்ளியில் நடாத்தவுள்ளனர்.

இந் நிகழ்வின் முக்கிய வளவியலாளர்களாக, மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரனும், வல்வெட்டித்துறை கடற் றொழிலாளர் சங்கச் செயலாளர் சி.சுபாசினியும், பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரி அதிபர் சு.செல்வமலர் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வின், முக்கிய பங்குதாரர்களாக செயல்திறன் அரங்க இயக்க உறுப்பினரால் “கல்லின் கழிவு” என்ற அரங்க நிகழ்வும் நடாத்தப்படவுள்ளது. (அ-7)

# ஞானச்சுடர் வெளியீடு

(பருத்தித்துறை)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் “ஞானச்சுடர்” புரட்டாதி மாத வெளியீடு எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இளைப்பாறிய கிராம அலுவலர் ஆர்.சுப்பிரமணியம் நூல் வெளியீட்டுரையும், சைவப் புலவர் எஸ்.செல்லத்துரை மதிப்பீட்டுரையும் நிகழ்த்தவுள்ளனர். (ற-52)

# மக்களுக்கான குடிநீர் சேவையில் யாழ். மாநகர சபையின் பங்களிப்பு

யாழ்ப்பாண மாநகர சபையினால் பொதுமக்களுக்கென வழங்கப்பட்டு வரும் முக்கிய சேவைகளுள் குடிநீர் விநியோகமும் ஒன்றாகும். இச் சேவையில் பாரிய குடிநீர் விநியோகத் திட்டங்களும் சிறிய குடிநீர் விநியோகத் திட்டங்களும் உள்ளடக்கப்படுகின்றன. பாரிய குடிநீர் விநியோகத் திட்டத்தில் கோண்டாவில் 'பம்' நிலையமும் மெயின் வீதி பிரதான தாங்கியும் திருநெல்வேலி 'பம்' நிலையமும் குருநகர் தாங்கியும் சேர்க்கப்பட்டுள்ளன.

04 கிணறுகளைக் கொண்ட குடிநீர் விநியோக நிலையமொன்று 1962ஆம் ஆண்டு கோண்டாவிலில் உருவாக்கப்பட்டது. இவற்றின் நடுவில் ஒரு கிணறும் அதிலிருந்து சம தூரத்தில் 03 கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இம் மூன்று கிணறுகளும் நடுவில் உள்ள ஆழமான கிணற்றிற்கு சுரங்கப்பாதையூடாக தொடர்பு படுத்தப்பட்டுள்ளன.

நடுவில் உள்ள கிணற்றில் இருந்து நீர் இறைப்பு இடம்பெறும் சமயங்களில் மற்றைய 3 கிணறுகளிலிருந்தும் குடிநீர் நடுவில் உள்ள கிணற்றுக்கு வரக்கூடிய வாறு சுரங்கப்பாதை வடிவமைக்கப் பட்டிருப்பது சிறப்பானதொரு அம்சமாகும் இப்படியான அமைப்பு முறையால் நீர் இறைப்பு முடிந்த சிறிது நேரத்திற்குள் நடுவில் உள்ள கிணற்றின் நீர் மட்டம் வழமையான நிலைமைக்கு வரக்கூடியதாகவுள்ளது.

இவ்வமைப்பு முறை குடிநீர் பெறும் யாழ். நகர மக்களுக்கு தெரியாத விடயமாகும் இதை பாடசாலை மாணவர்களுக்கு கல்விச் சுற்றுலாவின் போது பார்வையிடக் கூடிய இடமாகக் கருதமுடியும்.

கோண்டாவில் குடிநீர் விநியோக நிலையத்தில் இருந்து பிரதானதாங்கிக்கு குடிநீர் பாய்ச்சப்படுகிறது. இப்பிரதான தாங்கி 1963 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.இதன் உயரமும் கனவளவும் முறையே 40மீற்றர்,560கனமீற்றர் ஆகும். கோண்டாவில் குடிநீர் விநியோக நிலையத்தில் இருந்து பலாலி வீதியின் ஊடாக 300 மில்லி மீற்றர் விட்டமும் 6 கிலோமீற்றர் நீளமும் உடைய பிரதான குழாய் மூலமாக பிரதான வீதியில் உள்ள தாங் கிக்கு நீர் ஏற்றப்படுகிறது. இக்குடி நீர் 40 கிலோமீற்றருக்கு மேலான நீளமுடைய விநியோகக் குழாய் வலையமைப்பு மூலம் 650 பொது நீர் கம்பம் மூலமும் 400 தனியார் இணைப்பு மூலமும் விநியோகிக் கப்படுகிறது. இவ்விநியோகம் காலையிலும் மாலையிலும் மட்டுப் படுத்தப்பட்ட நேர அட்டவணை மூலம் ஏறத்தாழ 40,000 மக்கள் போதிய அளவு பயனடைகிறார்கள்.

யாழ். மாநகர சபையின் நீர் வேலைப்பகுதியில் 2005ஆம் ஆண்டு உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பாரிய திருத்த வேலைத் திட்டம் ஒன்றை மேற்கொண்டு ஆரியகுளச்சந்திப்பகுதி,பலாலி வீதி, பருத்தித்துறை வீதி மற்றும் ஆனைப்பந்திச்சந்திப்பகுதிகளில் உள்ள பொது நீர்க்கம்பங்களில் போதிய அளவு நீரைப்பெறக்கூடிய வழி சமைத்துள்ளார்கள்.

திருநெல்வேலி குடிநீர் விநியோக நிலையம் இரண்டு கிணறுகளுடன் கடந்த 1952ஆம் ஆண்டு முதல் செயற்படத் தொடங்கியது அதே காலப்பகுதியில்தான் குருநகர் குடிநீர் தாங்கியும் கட்டி முடிக்கப்பட்டது. இத்தாங்கிக்கு 110 கன மீற்றர் கனவளவுள்ள விநியோக நிலையத்திலிருந்து பலாலி வீதியூடாக 150 மில்லி மீற்றர் விட்டமும் 05 கிலோ மீற்றர் நீளமுமுள்ள வேறு விநியோகக் குழாய் மூலம் நீரேற்றப்படுகிறது.

காலையிலும் மாலையிலும் ஒவ்வொரு மணித்தியாலம் 70 பொது நீர்க்கம்பங்கள் மூலமும் 50 வரையான தனியார் இணைப்புக்கள் மூலமும் ஏறத்தாழ 10,000மக்கள் குடிநீரைப் பெற்றுப் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்தோடு இவ் விநியோக நிலையத்திருந்து குடிநீர் தேவைக்காக மட்டும் யாழ். போதானவைத்தியசாலையிலுள்ள தாங்கிக்கு தினமும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது.

1972 ஆண்டிலே 45 கன மீற்றர் கனவளவுள்ள குடிநீர் தாங்கியொன்று நவீன சந்தையினுள் நிர்மாணிக்கப்பட்டது. அங்குள்ள குழாய்க்கிணற்றிலிருந்து இத்தாங்கிக்கு நீரேற்றப்பட்டு பஸ் தரிப்பு நிலையம் நவீன சந்தை மற்றும் போதனாவைத்தியசாலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 10க்கும் மேற்பட்ட பொதுநீர்க்கம்பங்கள் மூலமாக காலை மாலை மற்றும் பகல் நேரங்களில் யாழ். நகருக்கு வருகை தரும் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. அத்தாங்கிக்கு திருநெல்வேலி குடிநீர் விநியோக நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்யக்கூடிய பிரத்தியேகமான அமைப்பு ஒன்றும் உள்ளது.

யாழ். மாநகரசபையின் ஆறு சிறிய நீர்விநியோகத்திட்டத்தில் நாயன் மார்கட்டு தாங்கி, சட்டநாதர் தாங்கி, கச்சேரி நல்லூர் வீதி தாங்கி, கொழும்புத்துறை உப்புக்குளம் பிள்ளையார் தாங்கி, அரியாலை சித்தி விநாயகர் தாங்கி மற்றும் பொம்மைவெளி தாங்கி ஆகியவை அடங்குகின்றன. இச் சிறிய திட்டங்கள் மூலம் 15,000 மக்கள் குடிநீரைப் பெற்றுப் பயனடைகின்றனர்.

பின்னர் 1997ஆம் ஆண்டு மாநகர சபையின் குடிநீர் விநியோகத் திட்டத்தைப் புனரமைத்து மீள்விக்கும் வேலைகளை ஜீ.ரி. சற் நிறுவனம் பொறுப்பேற்று செயற்படுத்தியதன் மூலம் உடைந்த பாரிய நீர்விநியோகக் குழாய்கள், புதிய பொதுநீர்க்கம்பங்கள், பாரிய மின் பிறப்பாக்கிகள் ப்திய நீரேற்றும் பம்பிகள் மற்றும் தேவையான உபகரணங்கள், 06 பவுசர்கள், 05 டிராக்டர்கள், 02 இழுவைப்பெட்டிகள் போன்றவை மாநகர சபைக்கு வழங்கப்பட்டு நீர் விநியோகத்தை சீராக்கி மீண்டும் நடைபெற வழி ஏற்பட்டது.

**ச.கந்தராஜேஸ்வரன்**
நீர்வேலைப் பொறியியலாளர்
யாழ்.மாநகரசபை

உள்ளூராட்சி வாரக்கொண்டாட்டத்தை தொனிப்பொருளாகக் கொண்டு பின்வரும் இச்செயற்றிட்டங்கள் மக்களுக்காக முன் னெடுக்கப்படுகின்றது.

மாநகர சபையின் குடிநீர் விநியோகத்திட்டதைப் பெறுத்தவரையில் முக்கியம் பெறும் குடிநீர்க் கம்பங்கள் 300ற்கும் மேற்பட்டவை திருத்தம் செய்யப்பட்டு சூழவுள்ள பகுதிகளும் துப்புரவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பொதுக்குடிநீர் கிணறுகள் மற்றும் பொதுக்குளியல் கிணறுகள் போன்றவை இறைத்து சுத்தம் செய்வதோடு கிணற்றை சுற்றியுள்ள பகுதிகளும் அவ்வப்பகுதி மக்களின் உதவியுடன் துப்புரவு செய்யப்படவுள்ளன.

மக்களுக்கு பொது நீர்க்கம்பம் இல்லாத பகுதியான நாவாந்துறை மண்பிட்டி மக்கள் நீர் பெறக் கூடியதாக பொதுவான இடத்தில் நீர்க் கம்பம் அமைத்து அப்பகுதி மக்கள் மட்டும் குடிநீர் பெற நீர்க்கம்பம் அமைக்கப்படவுள்ளது.

தனியார் நீர் இணைப்பிற்கு விண்ணப்பித்தவர்களுக்கு அவர்களது ஆவணங்களைப் பரிசீலித்து பொருத்தமான நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றது.

குடிநீர்க்கம்பங்களில் பொருத்தப்பட்டு பழுதடைந்துள்ள நீர் வரும் குழாய்கள் அவ்வப்பகுதி பொது அமைப்புக்களால் இனங்காணப்பட்ட 50 ற்கும் மேற்பட்டவை புதிதாக மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

யாழ் .மாநகரசபையினர் தொடர்ந்து பாதுகாப்பான குடிநீர் விநியோகத்தை செய்ய வசதியாக ஒவ்வொரு பொது நீர்க்கம்பங்களை பாவனையாளர் சங்கம் அமைத்துத் நீர்கம்ப பராமரிப்பும் குடிநீர் வீண் விரயத்தை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வசதியாக நீக்கம்பங்கள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்படிச் செய்வதன் மூலம் யாழ். நகர மக்கள் சுத்தமான குடிநீரைப்பருகி சுகமுடன் வாழ மாநகரசபை வழிவகுக்கும் என நம்புவோமாக.

## அலங்கார உற்சவம்

(துன்னாலை)

துன்னாலை தெற்கு கிளானையம் பதி காளிஅம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வேட்டைத்திருவிழாவும் நேற்று திங்கட்கிழமைதேர் உற்சவமும் நடைபெற்று இன்று செவ்வாய்க்கிழமை தீர்த்ததோற்சவத்துடன் திருவிழா இனிதே நிறைவேறவுள்ளது .(து-101)

## நெற்செய்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் மழை பெயயாமல் இருப்பதால் விவசாயிகள் காலபோக நெற்செய்கைக்கு தமது நெல்வயல்களைப் பண்படுத்தித் தயார் செய்ய முடியாதநிலையில் இருக்கின்றனர்.

வழமையாக வருடந்தோறும் இக்காலப் பகுதியில் மழை வீழ்ச்சி ஏற்பட்டுவந்துள்ள போதிலும்கூட இப்போது மழை பெய்யாமல் இருககின்றது.

மாவட்டத்தில் நீண்டகாலமாக மழை வீழ்ச்சி ஏற்படாமல் இருப்பதால் கிராமியக் குளங்கள் மற்றும் வயல்வெளிக் கிணறுகளில் நீரின் அளவு பெருமளவு குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேசமயம் காலபோக நெல் விதைப்பை விவசாயிகள் இம்மா தம் 15ஆம் திகதிமுதல் அக்டோபர் 15ஆம் திகதிவரையான காலப் பகுதியில் மேற்கொள்ள முடியும் என கமநல சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளாது. (அ-16)

## கவிதை கட்டுரைப் போட்டிகள்

சமூக நலத்துறைத் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலகம் எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் சர்வதேச சிறுவர் தினம், முதியோர் வாரம் தொடர்பான கவிதை, கட்டுரைப போட்டிகளை நடாத்தவுள்ளது.

இந்தவகையில் 15ஆம் திகதியனறு சர்வ தேச சிறுவர் தினம் தொடர்பான கவிதை, கட்டுரை போட்டிகளும் 16ஆம் திகதி முதியோர் வாரப் போட்டிகளும் இடம்பெறவுள்ளதாக பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இப் போட்டிகளில் தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கும் பாடசாலைகளின் மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ-16)

# ஓய்வூதியத் திணைக்களத்தில் நிதிப்பற்றாக்குறை உபகாரப்பணக் காசுக்கட்டளைகள் தேக்கம்

(கொழும்பு)

ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர்களுக்கான உபகாரப்பணக் கொடுப்பனவை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில மாதங்களின் மாத்திரம் இந்த ஒய்வூதியக் கொடுப்பனவுகளுககான காசுக்கட்டளைகள் அதிகளவில் ஓய்வூதியத்திணைக்களத்தில் குவிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் மேற்கொள்ளப்பட்ட ஓய்வூதிய சம்பளத்தின் முறைமைக்கு அமைய இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் உபகாரப்பண கொடுப்பனவுக்காக பெருமளவு நிதி தேவையென ஓய்வூதிக் கொடுப்பனவுப் பணிப்பாளர் கே.எ.திலகரட்ண தெரிவித்தார்.

அதேபோன்று ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைத்த போதிலும் நிதியின்மை காரணமாக அவர்களுக்கான கொடுப்பனவை வழங்க முடியாதுள்ளது.

இவ்வாறான நிதி திறைசேரியில் இருந்து தமக்கு கிடைக்காமையே இதற்கான முக்கிய காரணமாகும். இவர்களுக்கான கொடுப்பனவை வழங்குவதற்கு 40 கோடி ரூபா உடன் தேவைப்படுவதாக திறைசேரிக்கு அறிவிக்கப்பட் டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

40 கோடி ரூபா தேவைப்பட்ட போதிலும் திறைசேரியிடமிருந்து 100 இலட்சம் ரூபா தமக்கு கிடைததுள்ளதாக தெரிவித்த பணிப்பாளர் மிகுதித் தொகை கிடைக்கும் பட்சத்தில் சகலருக்கும் அதனை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-9)

# மொழித்திறன் அற்ற ஆங்கில ஆசிரியர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆங்கில ஆசிரியர்களாக புதிதாக நியமனம் பெற்றவர்களுக்குப் போதிய ஆங்கில,இலக்கண அறிவு இல்லாமல் இருப்பதால் ஆங்கில மொழி கற்பிப்பதில் பல இடர்பாடுகள் எதிர்நோக்கப்படுவதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இதனால் இத்தகைய ஆசிரியர்களிடம் ஆங்கில பாடத்தை கற்க வேண்டிய நிலையில் உள்ள மாணவாகளில் பரிதாபகரமான நிலை குறித்து ஆங்கில மொழி தெரிந்த பெற்றோர்கள் புகார்களை தெரிவித்து வருகின்றனர்எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் சர்வதேச மொழியாகிய ஆங்கில மொழியைக் கற்பிப்பதில் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களின் ஆங்கில எழுத்துக்கள் ,சொல் உச்சரிப்புகள் திருப்திகரமாக இல்லாமல் இருப்பதும் பெற்றோரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மாணவர்களின் ஆங்கில மொழி அறிவு விருத்தியடைவது எவ்வாறு எனப் பெற்றோர் கவலை கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்னமும் பல கிராமப்புற பாடசாலைகளுக்கு நிரந்தர ஆங்கில ஆசிரியர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் அறியப்படுகிறது. (அ-16)

## வருடாந்த கூட்டம்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இயங்கிவரும் மக்கள் நலன் காக்கும் பிரிவு எனும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி காலை 10மணிக்கு இருபாலையில் நடைபெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராசாதலைமை யில் நடைபெறும் இப் பொதுக்கூட்டத்தில் நிர் வாக சபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள் என அமைப்பின் தலைவர் வ.செல்லத்துரை தெரிவித்துள்ளார். (அ-16)

# வலிகாம அகதிமுகாம்களில் வசிக்கும் மாணவர்களின் கல்வியில் பெரும் பாதிப்பு


வலிகாமம் பகுதியில் அமைந்துள்ள அகதிகள் முகாம்களில் இருக்கக்கூடிய பாடசாலை செல்கின்ற மாணவர்களில் பெரும் தொகையானவர்கள் குடும்பங்களின் பொருளாதார கஷ்டநிலைகள் காரணமாக தமது பாடசாலைக் கல்வியை இடைநடுவில் முற்றுப் புள்ளிவைத்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர் எனத் தெரியவந்துள்ளது. இம் முகாம்களில் இருந்து பாடசாலைகளுக்குச் செல்கின்ற மாணவர்களினால் கல்வித் தேவைக்கான பணத்தினைப்பெற முடியாமல் இருப்பதாலேயே பாட சாலைக்கல்விக்கு முழுக்குப் போட்டுள்ளனர்.

அத்துடன் அகதிமுகாம்களில் நிர்மாணிக்கப்பட்ட அரை நிரந்தர வீடுகள் மிகவும் நெருக்கமாக இருப்பதால், வீடுகளில் அடிக்கடி இடம்பெறும் குடும்பச் சண்டைகள், வானொலிப்பெட்டிகளை அதி உச்ச ஓசையில் ஒலிக்க விடுதல், மதுபாவித்தவர்கள் தொல்லைகள் காரணமாக, முகாம்களில் வாழ்கின்ற மாணவர்களினால் தமது கல்வியில் கவனத்தைச் செலுத்திப் படிக்க முடியாமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

வலிகாமம் பிரதேசத்தில் இயங்கிவரும் அகதிகள் முகாம்களில் சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் வரை கடந்த 15 வருடகாலமாக வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதேசமயம் வலிகாமம் வடக்குப் பிரதேசத்தினை அண்டி வாழ்ந்த இக் குடும்பங்களில் 90 சதவீதமா னோர் கடற்றொழில், மற்றும் விவசாயத் தொழில்களையே நம்பி வாழ்ந்தவர்களாவர்கள். 1990ஆம் ஆண்டு முதல் இடம் பெயர்ந்த நிலையில் வாழ்ந்துவரும் இத்தகைய குடும்பங்களுக்கு நிரந்தர தொழில் இல்லாமையினால் வருமானம் மிகவும் குறைந்த நிலையில் அரசினால் வழங்கப்படும் இலவச நிவாரணஉதவியை மட்டுமே நம்பி வாழ்ந்துவருகின்றன.

இதேவேளை இடம்பெயர்ந்த நிலையில் வாழ்கின்ற குடும்பங்களில் இருக்கக்கூடிய மாணவர்களின் கல்வி நிலையானது பெரும் கேள்விக்குறியாகவே இருந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இது இவ்விதமிருக்க அகதிகள் முகாம்களில் இருந்து பாடசாலைக்குச்செல்கின்ற மாணவர்களில் சுமார் 90சதவீதத்தினர்காலை வேளைச் சாப்பாடுகூட இன்றி வெறும் வயிற்றுடனே செல்வதாகவும் அறியப்படுகின்றது. இத்தகைய மாணவர்களின் வாழ்க்கை நிலையையும் கல்வி நிலையையும் மேம்படுத்துவதற்கு அரச அதிகாரிகளோ அல்லது பொது அமைப்புக்களோ எத்தகைய உதவித் திட்டங்களையும் வழங்க முன்வரவில்லை எனவும் தெரியவருகின்றது. அக திகள் முகாம்களில் இருந்து பாட சாலைகளுக்குச் செல்லாமல் இருக்கின்ற 18வயதுக்குறைந்த மாணவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் வேலைக்கு அமர்த்தப்பட்ட நிலையில் இருப்பதாகவும் அறியப்படுகின்றது.(அ-16)

# குரு மாற்றம்



## விருச்சிகம்

அன்பார்ந்த விருச்சிக வாசகர்களே! எதிலும் உறுதியுடன் செயல்படும் உங்களுக்கு 27-06-2005 இல் அஷ்டமச்சனி முற்றிலும் விலிகியது. வாழ்வில் ஏற்றத்தினை ஏற்படுத்தும் அமைப்பென்றாலும் தன பஞ்சமாபதியான குரு பகவான் 19.09.2005 முதல் 20.10.2006 முடிய ஜென்ம இராசிக்கு 12 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்வதால் உங்களுக்கு பொருளாதார ரீதியாக சங்கடங்கள் மேலோங்கும். எதிர்பாராத விரயங்கள் ஏற்படும் நிலை, கொடுத்த வாக்குறுதியினைக் காப்பாற்ற முடியாத சூழ்நிலை உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பாராத இடமாற்றம் ஏற்படும். சிலருக்கு இருப்பிட மாற்றமும் உண்டாகும். புத்திர ஸ்தானமான 5ஆம் வீட்டில் சர்ப்ப கிரகமான இராகு பகவான் 21.09.2006முடிய சஞ்சாரம் செய் வதால் புத்திர வழியில் மன அமைதி குறையும் நிலை. எதிர்பாராத செலவுகள் உண்டாகும். தன பஞ்சமாதிபதியான குரு பகவான் வரும் நாள்களில் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்க உள்ளதால் குடும்பத்தில் பொருளாதார ரீதியாக நெருக்கடிகளும் வரவுக்கு மீறிய செலவுகளும் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை அலைச்சல், குழப்பம் இருந்தாலும் ஆரோக்கிய நிலை சிறப்பாக இருக்கும். சமுதாயத்தில் நல்ல நிலையை அடைய நீங்கள் நிதானத்தைக் கடைப்பிடிப்பது உத்தமம்.

### ஆரோக்கியம்

உடல் நலத்தில் முழுக்கவனமும் செலுத்த நேரும். சிலருக்கு கட்டிகளுக்கு சிறு அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டிய நிலை உருவாகக்கூடும். புத்திரர்களால் நிம்மதி குறையும், கவலைகளும் உருவாகும். மனைவியின் பிரசவச் செலவுகள், வயிற்றுக்கோளாறுகள் போன்றவற்றுக்காக அதிக மருத்துவச் செலவுகளை எதிர்கொள்ள நேரிடும். மன அமைதிக் குறைவும் வேதனைகளும் கூடும். எதிலும் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். வெளியூர்ப் பயணத்தை தவிர்ப்பது உத்தமம். அமைதியற்ற சூழ்நிலைகள் அமையும்.

### செல்வம், செல்வாக்கு

உங்கள் செல்வம் செல்வாக்கு குறைவுபடும். நெருங்கியவர்களால் ஏமாற்றப்படவும் நேரிடும். வம்பு, வழக்குகள் மூலம் அதிகமான பணவிரயமும் கடன்களால் மிகவும் விரோதமான நிலையும் உண்டாகும். பழிவாங்க எதிரிகள் சூழ்ச்சிசெய்வார்கள். தேவையற்ற சிக்கல்களில் சிக்கிக்கொள்ள நேரிடும். மிக எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய காலமாகும். உடன் இருப்பவர்களே விரோதியாக மாறிவிட வாய்ப்புள்ளது. எதிர்பாராத வம்பு வழக்குகளும் உண்டாகும். பெரிய மனிதர்களின் ஆதரவுகளையும் உதவிகளையும் பெறுவது கடினம்.

### குடும்பச் சூழ்நிலை

சிலர் வீட்டில் கணவன், மனைவி இடையே உறவில் பிரிவு உண்டாகி சில நாட்களுக்கு மனைவி தாய்வீடு அல்லது வேறு இடத்திற்குச் செல்ல நேரிடும். பெண்கள் மிகவும் அனுசரித்து நடப்பதன் மூலம் குடும்ப வாழ்வில் குழப்பத்தை தவிர்த்துவிட முடியும். தாய், மகன் உறவிலும் இக்காலத்தில் பாசம் குறைவாகவே தான் காணப்படும். பிறரது பேச்சுக்களை கேட்கக்கூடாது. உற்றார் உறவினர்கள் மூலம் சிறு மன வருத்தம் காணப்படும். கடன்தொல்லை தரும். திருமண சுபகாரியம் தடை ஏற்படுத்தும்.

### உத்தியோகத்தர்களுக்கு

தேவையின்றி உயர் அதிகாரிகளைப் பகைத்துக்கொள்ள நேரிடும். திடீர் இட மாற்றத்திற்கு இதுவே கூட ஒரு காரணமாக அமைந்துவிடும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை முறைப்படி உங்களுக்கு வரவேண்டியது வேறுயாருக்கோ போவதால் மனம் புழுங்குவீர்கள். சக நண்பர்களிடம் பிரச்சினைகள் தலைதூக்கும். வீண்பழியை உங்கள் மீது போடுவதால் கொதித்துப் போவீர்கள். பொறுமையைக் கைவிடக் கூடாது. கெடுதல் ஏதும் நடக்காது என நம்புங்கள். மேலதிகாரிகள் கடுஞ் சொற்களைப் பேசுவார்கள். புதிய வேலைவாய்ப்புக்கள் தற்போது தாமதித்து அமையும். சுறுசுறுப்பாக செயல்பட முடியாதபடி உடல்நலம் கெடும்.

### தொழிலதிபர்களுக்கு

செய்கின்ற தொழிலில் பல விதத்திலும் மறைமுக எதிரிகளின் தொல்லைகளை அடைய நேரிடும். கூட்டுத் தொழிலில் கூட்டாளிகளிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும். எதிலும் எச்சரிக்கை தேவை. தொழில் நஷ்டத்தையும் கருத்து வேறுபாட்டையும் ஏற்படுத்தும். கமிஷன், ஏஜென்ஸி, காண்ட்ராக்ட் போன்வற்றில் கையொப்பமிடும் போது மிகுந்த எச்சரிக்கை தேவை. தொழில் நிலையில் போட்டி, பொறாமைகள் ஏற்படும். பெரிய அளவில் இலாபம் எதிர்பார்க்க முடியாது. எதிலும் எச்சரிக்கை தேவை.

### மங்கையருக்கு

கோபம் அதிகம் உண்டாகும். எரிச்சல், சோர்வால் வாடிப் போய்க்காணப்படுவீர்கள். குடும்பத்தில் கணவர், கணவர் குடும்பத்தாரை அனுசரித்துப் போக இயலாது. பணியில் கூடுதல் உழைப்பு, ஓய்வின்மை போன்றவை குழப்பத்தை ஏற்படுதகும். சிலருக்கு மாதவிலக்குக் கோளாறு உண்டாகும்.

### கல்விநிலை

கல்வியில் மந்தமான நிலை அமையும். உங்கள் மனக்கவலைகளை ஓரமாக ஒதுக்கி வைத்து கடின முயற்சியை மேற்கொண்டால் ஓரளவு மதிப்பெண் பெறமுடியும். ஆசிரியர்களின் ஆதரவு குறையும். உங்களுக்கு சோர்வும் சோம்பலும் காணப்படும்.

### கலைஞர்களுக்கு

நீங்கள் திட்டமிட்டபடி செயல்பட முடியாது. எதிலும் தடை, தாமதம் உண்டாகும். நல்ல வாய்ப்புகள் தவறும். போட்டி, பொறாமைகள் உண்டாகி வரவு தடைப்படும். பட வாய்ப்பு ஒப்பந்தங்களில் மிகவும் எச்சரிக்கையோடு கையொப்பமிடுவது நல்லது. வெளிநாட்டு வாய்ப்புகளில் அலைச்சலும், குழப்பமும் உண்டாகும். தனவரவு தாமதமும் தடையையும் ஏற்படுத்தும். எடுக்கும் முயற்சிகளில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

### உழவர்களுக்கு

விவசாய நிலையில் பெரிய அளவில் எதிர்பார்த்து அதற்கு நேர்மாறாய் நடைபெறுவதால் மனத்தில் கவலையும் பண நஷ்டமும் உண்டாகும். எந்தவொரு முயற்சியையும் பலமுறை யோசித்து செயல்படுத்துவது நல்லது. சிலருக்கு அரசு வங்கிக் கடனை சரியான காலத்தில் திரும்பச் செலுத்த முடியாதநிலை ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் ஏற்படும்.

### இளைஞர்களுக்கு

உங்களுடைய திறமைகளையும் முயற்சிகளையும் வெளிப்படுத்த இது தக்க சமயம் இல்லை. உங்களிடம் வேலை வாங்குபவர்கள் இவற்றைப் புரிந்து கொள்ளமாட்டார்கள். நண்பர்கள் மூலம் தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடாமல் ஒதுங்கிச் சென்று விடுவதால் நன்மைகள் ஏற்படும்.

குருபகவான் துலாத்தில் சித்திரை நட்சத்திரத்தில்
19.09.2005 முதல் 20.10.2005வரை

உங்கள் அவசர புத்தியினால் தேவையில்லாத சிக்கல்களைச் சந்திப்பீர்கள். யாரையும் நம்பி எந்தவொரு செயலிலும் ஈடுபடுவது கூடாது. கொடுக்கல், வாங்கலில் அதிக உஷார் தேவை. நெருக்கமானவர்களாலேயே ஏமாற்றப்பட வாய்ப்புள்ளது. பொருளாதார நிலை மிகவும் சாதகமற்றிருக்கும். கடன் தொல்லைகளால் விரோதம் உண்டாகும். எடுக்கும் எந்தவொரு காரியமும் தடைப்பட்டு நிற்கும். திருமண முயற்சிகளைத் தவிர்த்து விடவேண்டும். தொழில், வியாபாரத்தில் அதிக போட்டி, பொறாமைகளையும், அரசு மூலம் எதிர்பாராத சோதனைகளையும் சந்திக்க நேரிடும். கூட்டுத்தொழில் கூட்டாளிகளிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றும். பொருள் தேக்கம் ஏற்படும். உத்தியோக நிலையில் அடிக்கடி உடல நல பாதிப்பினால் விடுப்பு எடுத்து அதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

குருபகவான் துலாத்தில் சுவாதி நட்சத்திரத்தில் 21.10.2005முதல் 26.12.2005 வரை

இக்காலத்தில் எதிர்பார்த்த நன்மைகளைப் பெறமுடியாத சூழ்நிலையால் மன வேதனை அடைவீர்கள். பொருள் வரவுகள் நிறைய வந்தாலும் செலவுகளைப் பார்க்கும் போது மன வேதனை உண்டாகும். வண்டி, வாகனம் எதிர்பாராமல் பழுதடையும். அசையாச் சொத்து வகை செலவுகளை உண்டாக்கும். திருமண சுப முயற்சிகளுக்கு உற்றார், உறவினர், நண்பர்களே முட்டுக்கட்டையாக இருப்பார்கள். நீண்ட பயணத்தால் களைப்பும் அலைச்லோடு குழப்பம் அடைவீகள், கடன்களால் மன அமைதி குறையும், தொழில் வியாபாரம் கூட்டுத் தொழில் கமிஷன், ஏஜென்சி, காண்ட்ராக்ட், போன்றவற்றில் மிகவும் மந்தமான நிலை ஏற்பட்டு இலாபம் உண்டாக தடை ஏற்படும். வேலையாட்களால் வீண் பிரச்சினைகளை சந்திக்க நேரிடும்.

குருபகவான் துலாத்தில் விசாக நட்சத்திரத்தில்
27.12.2005முதல் 02.03.2006 வரை

தொடர்ந்து சோதனைகளும் வேதனைகளுமே ஏற்படும். மனதில் நிம்மதியற்ற நிலையில் காணப்படுவீர்கள். உடல் நலம் அதிகச் சோர்வுடன் காணப்படும். மனைவ மற்றும் குடும்பத்தில் உள்ளவர்களால் மன அமைதி குறைவதோடு மருத்துவச் செலவுகளையும் எதிர்கொள்வீர்கள். சிலருக்கு வம்பு வழக்குகள் இழுபறியாகும். அரசியல்வாதிகள், நெருங்கியவர்களாலேயே வீண் சிக்கலில் சிக்கிக் கொள்வீர்கள். திருமண சுபகாரியம் இடையூறுகளைச் சந்திக்கும். தொழில் வியாபாரத்தில் கடுமையான போட்டிகளைச் சந்தித்து இலாபம் பெற இடையூகள் உண்டாகும். கொள் முதலில் ஏமாற்றம் ஏற்படும். உத்தியோக நிலையில் அதிகாரிகளிடம் வீண் பிரச்சினை ஏற்படும். எதிர்பாராத இடமாற்றம் மனவருத்தமளிக்கும். மாணவர்கள் கடுமையான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

குருபகவான் வக்ர நிலையில்
03.03.2006 முதல் 04.06.2006வரை

இக்காலத்தில் கடந்த காலத்தின் சோதனை யாவும் விலகி ஏற்றமிகு பலனை அடைய முடியும். மனத்தில் தெளிவும் உடல்நிலையில் தெம்பும் கூடும். மனைவி மற்றும் பிள்ளைகளின் நலம் திருப்தியாகவே அமையும். பொருளாதார நிலையில் தடைப்பட்ட நிலைமை நீங்கி பணம் வந்துசேரும். கடன் தொல்லைகளில் இருந்து விடுபட்டு மனத்தில் நிம்மதியும் பூரிப்பும் அடைவீர்கள். சேமிப்பும் அமையும். வீடு, வண்டி, வாகன சேர்க்கையும் ஆடை ஆபரணம் நினைத்த திருமண சுபகாரியமும் கை கூடும். தொழில் வியாபாரம் போட்டி பொறாமைகள் இன்றி சிறப்பான இலாபத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்தும். கூட்டாளிகளுடன் சிறப்பான கருத்தொற்றுமையும் புதிய தொழிலில் நல்ல கூட்டாளிகளும் சேருவார்கள். புதிய வேலைவாய்ப்புகள் வந்து சேரும். அதிகாரமுள்ள பதவி உயர்வும் ஊதிய உயர்வும் பெற்று மகிழ்வீர்கள்.

குருபகவான் துலாத்தில் சுவாதி நட்சத்திரத்தில்
05.06.2006முதல் 18.08.2006வரை

எந்தவொரு செயலைச் செய்வதென்றாலும் மிகவும் நிதானமாகச் செய்வது நல்லது. தேவையற்ற விசயங்களில் மூக்கை நுழைத்தால் அவமானப்படவும் நேரிடும். உடல் நலம் சுமாராக இருக்கும். பிள்ளைகள் வழியில் மருத்துவச் செலவுகள். மனைவியின் வழியில் சில உடல் உபாதைகள் ஏற்படும். மனத்தில் குழப்பமும் எதைச் செயவது, எப்படிச் செய்வது எனத் தவிக்க நேரிடும். பொருளாதார நிலையில் மேன்மை இருக்காது. கடன்கள் அதிகம் தொல்லை தரும். சிக்கனமாகச் செலவு செய்வது மிகவும் அவசியமான ஒன்றாகும். தொழில் உத்தியோகநிலையில் சோர்வான நிலை காணப்படும். பணவரவுகள் தக்க சமயத்திற்கு உதவாது. கூட்டுத் தொழிலில் அதிக கவனம் தேவை. திருமண சுப காரிய முயற்சி தள்ளிப்போகும். கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடு உருவாகும். வெளியூர்ப் பயணம் அலைச்சலைத்தரும்.

குருபகவான் துலாத்தில் விசாக நட்சத்திரத்தில்
19.08.2006முதல் 20.10.2006வரை

இக்காலத்தில் உங்களது சோதனையும் வேதனையும் தொடர்ந்த படியே இருக்கும். உடல் நலமும் மனமும் பாதிக்கும். ஏதேனும் ஒரு கவலை மனத்தினை அமைதியற்றதாக்கும். குடும்பத்திலும் பொருளாதார நிலையும் பண வரவுகளின்றி கடன் தொல்லைகளால் சங்கடப்பட நேரிடும். உற்றார், உறவினர்கள், நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடையாது. கணவன் -மனைவி உறவில் திருப்தியற்ற நிலை காணப்படும். திருமண சுபகாரிய முயற்சிகள் தடை உண்டாகும்.

## உங்களுக்கு எப்படி?

**19-09-2005 முதல் 20-10-2006 வரை**

தொழிலும் வியாபாரமும் வீண் விரயங்களை ஏற்படுத்தும். நெருக்கடியும் பண முடக்கமாகும் நிலையும் ஏற்படும். அரசியல்வாதிகள், நெருக்கமானவர்களால் வீண்பழிக்கு ஆளாவீகள். வீண் வம்பு வழக்குகளும் உண்டாகும். மாணவர்களின் கல்வியில் முன்னேற்றம் ஏற்படத் தடை உண்டாகும்.

### நட்சத்திரப் பலன்கள்

*விசாகம் 4ஆம் பாதம்:-* உங்களின் உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டும். மனைவிக்கு சில சமயம் உடல் நலம் பாதிக்கப்பட்டு அதனால் மருத்துவச் செலவுகள் ஏற்படும். பிள்ளைகளால் வீண் விரயங்களை எதிர்கொள்ள நேரிடும். திருமண சுபகாரிய முயற்சிகள் தள்ளிப்போகும். மனத்தில் வருத்தமும் மகிழ்ச்சிக் குறைவும் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் கவனத்துடன் படிக்க வேண்டும்.

அனுஷம்:- பண விஷயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். யாரையும்

ஜோதிட மேதை
பாலமுருகன்

நம்பி முன் ஜாமின் கொடுப்பதும், பெரிய தொகையைத் தருவதும் சிக்கலில் சிக்கிக்கொள்ளச் செய்துவிடும். எனவே சிக்கனமாக இருப்பது நல்லது. தொழில் வியாபார நிலையில் மந்தமான நிலையில் இலாபம் அமையும். பொருள் தேக்கம் ஏற்படுத்தும். புதிய முயற்சிகளையும் தூரப் பயணங்களையும் கூடுமான வரை தவிர்ப்பது உத்தமம்.

கேட்டை:- உத்தியோகநிலையில் உயர் அதிகாரிகளை அனுசரித்துப் போக மாட்டீர்கள். எதிர்பாராத மாறுதல் கிடைத்து சிலர் குடும்பத்தைவிட்டு பிரிந்து செல்வதோ அல்லது இங்கும் அங்கும் அலையவோ நேரிடும். வம்பு, வழக்குகளின் மூலம் செலவுகள் அசையாச்சொத்துக்களின் மேல் கடன்கள் உண்டாகும். புதிய வேலை கிடைக்க தடை உண்டாகும். ஊதிய உயர்வும் பதவி உயர்வும் தடைப்படும்.

### பரிகாரம்

உங்கள் ராசிக்கு விரய ஸ்தானமான 12ஆம் வீட்டில் குரு பகவான் சஞ்சாரம் செய்வதால் வியாழக்கிழமைகளில் குரு தட்சணாமூர்த்தியை தரிசித்து மஞ்சள் துண்டு சாத்தி முல்லை மலர்களால் அர்ச்சனை செய்வதும் குருமந்திரம் குரு காயத்திரியை ஜெபித்து வருவதும், ஏழை பிராமணர்களுக்கு உங்களால் முடிந்த அளவு உதவி செய்வது, படிக்கும் அவர்களது குழந்தைகளுக்கு புத்தகம், பேனா, நோட்டு போன்றவற்றை தானமாக வழங்குவதன் மூலம் குருவருளைப் பெற்று உங்கள் விரயங்களை குறைத்துக்கொள்ள முடியும். (தொடரும்)

## இன்று ஒரு தகவல்

# தமிழ்

உலக நாடுகளை எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு வந்த அன்பர் ஒருவர் சொன்னார். "ஐயா... பிரான்ஸ் நாட்டின் கடைத் தெருவில் நடக்கும் போது பிரான்ஸ் தெரிந்தது. ஜேர்மனிய நாட்டின் கடைத்தெருவில நடக்கும் போது ஜேர்மன் தெரிந்தது. ரஷ்ய நாட்டின் கடைத் தெருவில் நடக்கும் போது ரஷ்யா தெரிந்தது. ஆனால் தமிழ்நாட்டின் கடைத்தெருவில் நடக்கும் போது தமிழ்நாடு தெரியவில்லை. இங்கிலாந்துதான் தெரிகின்றது" என்றார். "ஏன் அப்படிச் சொல்கின்றீர்கள்?" என்று கேட்டேன். "எந்தப்பக்கம் திரும்பினாலும் ஆங்கிலத்தில் தான் பெயர்ப்பலகைகள் உள்ளன. தமிழில் யாரும் எழுதி வைப்பதில்லையே" என்றார். தலையைக் குனிந்து கொண்டேன். "குனியாதீர்கள் நிமிருங்கள்" என்றார். நிமிர்ந்தேன். அதன்பின் அவர் பேச ஆரம்பித்தார்.

அமெரிக்கா போயிருந்தேன். நயாகரா நீர்வீழ்ச்சியைப் பார்த்தேன். அங்கே முகப்பில நல்வரவு என்று எழுதியிருந்தது. இங்கே ஏன் தமிழில் எழுதி வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டேன். "உலகத்தில் மூத்த மொழி தமிழ். உயர்ந்தமொழி தமிழ். உலகத்தில் உயர்ந்த நீர்வீழ்ச்சி நயாகரா! அதனால் அதை இங்கே எழுதி வைத்திருக்கின்றோம்" என்றார்கள்.

ஜப்பானியப் பல்கலைக்கழக வாயில் முகப்பில் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற சங்கத் தழிழ்ப்பாடல் வரியை மொழிபெயர்த்து எழுதி வைத்திருக்கிறார்களாம். ஜெருசலேம் நகரில் உள்ள ஒலிவ் மலையில் கிறிஸ்தவக் கோயில் ஒன்றில் இயேசு கற்பித்த வழிபாட்டுக் கருத்து உலகில் உள்ள 68 மொழிகளில் எழுதப்பட்டுள்ளது.அதில் இந்திய மொழிகளில் தமிழ் மட்டுமே இடம்பெற்றுள்ளது.

புத்தர் தமிழ் படித்தார் என்று மிகப் பெரிய நூல் ஒன்று தமிழைப் புகழ்ந்து பேசுகிறது. "என் கல்லறையில் தமிழ் படித்த ஒரு மாணவன் என்று எழுதி வையுங்கள்" என்றார் போப். "திருக்குறளைப் படிக்க நான் தமிழனாகப் பிறக்க விரும்புகிறேன்"என்றார் இந்தியாவின் தந்தை காந்தியடிகள். இப்படி அவர் சொல்லிக்கொண்டே வந்தார்.

"அதுசரி தமிழுக்கு என்ன வயது தெரியுமா?" என்றார் உடனே நான் "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே... முன் தோன்றி" என்று ஆரம்பித்தேன். "ம்... உணர்ச்சி பூர்வமாகப் பேசாதீர்கள். அறிவு பூர்வமாகப் பேசுங்கள்" என்றார். நான் அடங்கிப் போய்விட்டேன். அதன்பின் சொன்னார்,"தமிழின் தோற்றம் கி.மு 50 ஆயிரம் ஆண்டு எனத் தமிழ் வரலாறு என்ற நூலின் மொழியில் அறிஞர் பாவாணர் குறிப்பிட்டுள்ளார்.

இயேசு பிறப்பதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் நம்மிடம் தோன்றியிருந்தது. இயேசு பிறந்து 500 ஆண்டுகளுக்குப் பின் தோன்றிய மொழி ஆங்கிலம். தமிழ்மொழி உலக மொழிகளுக்கெல்லாம் தாய் மொழி. அது தோன்றிய இடம் குமரிக்கோட்டம். அங்கிருந்து தான் மக்கள் பல நாடுகளுக்குப் போய்க் குடியேறினார்கள்.

மங்கோலிய சீன மொழிகளுக்கும் தமிழுக்கும் உறவு உண்டு என்கிறார் கால்டுவெல். இந்தோ ஐரோப்பிய மொழிகளும் தமிழும் நெருங்கியவை என்கிறார் ஆங்கில அறிஞர் கி.யு.போப் அவர்கள். ஹங்கேரி, துருக்கி,பின்னிசு போன்ற பதினொரு பின்னோ உக்ரியன் மொழிகள் தமிழிலிருந்து பிறந்தவை என்கிறார் கபோர் சென்த் கொதல் நய்.

சுமேரிய மொழிக்கும் தமிழுக்கும் உள்ள உறவைச் சுட்டிக்காட்டுகிறார் லோகநாத முத்தரையா. எலாமைட் மொழிக்கும் தமிழுக்கும் தொடர்பு உண்டென்கிறார் மக் ஆல்பின்.கொரியன் மொழிகதுப் தழிழுக்கும் உள்ள உறவை விளக்கியிருக்கிறார் அல்பிரட். ஜப்பானிய மொழிக்குத் தமிழே மூலம் என்கிறார் ஓனோ. ஆபிரிக்க மொழிகளுக்கும் தமிழுக்கும் உள்ள உறவைச் சொல்கிறார் செங்கோ. அவுஸ்திரேலியப் பழங்குடிகள் பேசிய மொழிகள் தமிழோடு கொண்டுள்ள உறவை அறியத்தருகின்றார் சமன்லால்.

உலகம் சுற்றி வந்த நண்பர் இப்படி நிறையச் சொல்லிக் கொண்டே போனார். "அது சரி ஏன் இப்படி இதையெல்லாம் என்னிடம் சொல்கிறீர்கள்?"என்று கேட்டேன்.தமிழ் பேசுபவர்களுக்கு தமிழ்மொழியைப் பற்றித் தெரிய வேண்டும் அல்லவா? அதற்காகத்தான் என்றார். "என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? எங்களுக்குத் தமிழ் பற்றித் தெரியாதா?" என்று கேட்டேன்."அது இருக்கட்டும் உங்களுக்கு 1330 குறள்களும் ஒழுங்காகத் தெரியுமா?" என்றார். நான்மறுபடியும் தலையைக் குனிந்துகொண்டேன் அவர் கேட்பதும் நியாயம் தானே.

ஒருநாள் ஒரு சிறுபையனைப் பார்த்துக் கேட்டேன் "தம்பி உனக்கு எத்தனை திருக்குறள் தெரியும்?" என்று. அவன் "எனக்கு 3000 திருக்குறள் தெரியும்" என்றான். "மொத்தம் இருப்பதே 1330 திருக்குறள் தானே நீ 3000 தெரியும் என்கிறாயே" என்றேன். "ஏன் சார் தமிழ் வளரவே கூடாதா?" என்றான்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

---

### மஹிந்த-ரணில்

# முஸ்லிம்கள் விடயத்தில் கவனமெடுக்காவிடின் தனித்தரப்பாக தேர்தலில் போட்டி -ஹக்கீம்

(கொழும்பு)

16 வருடங்களாக பிரச்சினைகளை எதிர்நோக்கி வரும் வடக்கு முஸ்லிம்களுக்கான மீள்குடியேற்றம், தொழில் வாய்ப்புக்கள், உரிமை போன்ற பல்வேறு விடயங்களுக்கு தீர்க்கமான செயற்பாட்டை இரு ஜனாதிபதி வேட்பாளர்களும் செய்யத் தவறும் பட்சத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் தான் போட்டியிடவுள்ளதாக அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வடமாகாண முஸ்லிம்களின் கருத்துக்களை அறிந்துகொள்ளும் முகமாக வன்னி மாவட்ட மத்திய குழு கடந்த வெள்ளிக்கிழமை மாலை புத்தளத்தில் ஏற்பாடு செய்திருந்த ஆய்வு அமர்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர்கள் யாராகவிருந்தாலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விதிக்கும் நிபந்தனையை ஏற்றுக்கொண்டு எவ்வளவு தூரத்துக்கு எமக்கு ஒத்துழைப்பு தருகின்றார்களோ அவர்களுக்கு ஆதரவு வழங்குவது குறித்து தீர்மானிக்கப்படும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பிக்கு அடிபணிந்து இனவாதத்துடன் இணைந்து செயற்படுகின்றார்.

வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அடிமையாக இருக்கமாட்டார் என்பதை முஸ்லிம் சமூகத்திற்கு நிரூபிக்க வேண்டும்.அதன்மூலம் முஸ்லிம்களின் ஆதரவினைப் பெறமுடியும் எனவும் ஹக்கீம் மேலும் தெரிவித்தார். (ற-4)

# இராணுவத் தளபதி தலைமையிலான குழு இந்தியா சென்று திரும்பியது

## எல்லை இராணுவ நிலைகளைப் பார்வை

(கொழும்பு)

இந்திய ஆக்கிரமிப்பு ஜம்முகாஷ்மீர்ப் பகுதியை இலங்கை இராணுவக் குழுவினர் பார்வையிட்டுள்ளனர்.

இராணுவத்தளபதி சாந்த கொட்டேகொட தலைமையிலான 11 பேர் கொண்ட இராணுவக்குழு இந்தியாவுக்கு இருநாள் பயணம் மேற்கொண்டதாகத் தெரிய வருகின்றது.

இப் பயணத்தில் கொட்டேகொடவின் துணைவியாரும் உடன் சென்றார்.

இவ் இராணுவக் குழுவினரை இந்திய இராணுவ அதிகாரி லெப் ஜெனரல் எஸ்.எஸ் திஷான் வரவேற்றார்.

இந்திய ஆக்கிரமிப்புக் காஷ்மீருக்குச் சென்ற இக் குழுவினர் இந்திய-பாகிஸ்தான்-காஸ்மீர் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டையொட்டியுள்ள இராணுவ நிலைகளைப் பார்வையிட்டனர்.

இந்திய இராணுவத்தினருடன் பாதுகாப்பு நிலைகள் குறித்து இவர்கள் கலந்துரையாடலை மேற்கொண்டனர். லெப் ஜெனரல் தில்லான் இலங்கை இராணுவக் குழுவினருக்கு விளக்கங்களை அளித்தார்.

இதேவேளை, ஜம்முகாஷ்மீர் ஆளுநரான எஸ்.கே. சின்காவை கடந்த புதன்கிழமை சந்தித்துவிட்டு இக் குழுவினர் இலங்கை திரும்பினர். (ற-4)

# சட்டத்தை இறுக்கமாக பின்பற்ற பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை

(கொழும்பு)

குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளவர்கள் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு உள்ள வாய்ப்புக்களைக் குறைப்பதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப் போவதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மட்டுமன்றி முழு உலகநாடுகளிலும் இவ்வாறான நிலை நீடிக்கின்றது. சிலர் மனித வுரிமைகள் தொடர்பான பிரச்சினைகளைக் காரணம் காட்டி குற்றச்செயல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் விசாரணைகளை பலவீனப்படுத்த முயற்சிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

குறிப்பாக பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்கள் இவ்வாறான முயற்சிகளில் கூடுதலாக ஈடுபடுகின்றனர்.

இது தொடர்பாக அண்மையில் செக்குடியரசில் நடைபெற்ற மாநாட்டில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது எனவும் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-8)

# கிராம ரீதியாக பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுக்கள் அமைப்பு

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி இடம்பெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வை ஒட்டி கிராம ரீதியாக பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் ,கிராமங்கள் மற்றும் நகரங்களில் உள்ள மக்கள் பிரதிநிதிகளை கூட்டாகச் சந்தித்து விளக்கக் கூட்டங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறான விளக்கக் கூட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் கலந்துகொண்டு விளக்கக் கருத்துக்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-43)

# பொங்குதமிழ் முன்னோடி மாநாடு

(திருநெல்வேலி)

பொங்குதமிழ் நிகழ்வை ஒட்டிய ஏற்பாட்டு முன்னோடி மாநாடு ஒன்று எதிர்வரும் 17ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் க.சிவகடாட்சம் தலைமையில் இடம்பெறவுள்ள இம் மாநாட்டில் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா, செ.கஜேந்திரன்,என்.ரவிராஜ், சிவநேசன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர்.

பொங்குதமிழ் நிகழ்விற்கான முன்னோடி மாநாடுகள் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-43)

# சட்டவிரோத முகவர்கள் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் குழுவைச் சேர்ந்த 4 பேர் இரகசியப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களினால் இத்தாலிக்கு அனுப்புவதற்காக அழைத்து வரப்பட்டிருந்த 73 வெளிநாட்டவர்கள் கண்டி, கொழும்பு ,நுவரெலியா ஆகிய பகுதிகளிலிருந்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் சுமார் மூன்றரை இலட்சம் ரூபா பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பது விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக இரகசியப் பொலிஸ் பிரிவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் பலர் கைதுசெய்யப்படவுள்ளதாகவும் விசாரணைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ற-8)

# கைதான இலங்கையர் விடுவிக்கப்பட்டார்

(கொழும்பு)

சிங்கப்பூரை தளமாகக் கொண்டு பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வுகளை நடத்தி வந்த இலங்கையர் ஒருவர் இந்தோனேஷியப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தான் பயங்கரவாதி என தவறாக அடையாளம் காணப்பட்டதன் காரணமாக இந்தோனேஷியப் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டதாக இஸ்லாமிய ஆயுததாரிகள் மற்றும் ஆசியாவின் பயங்கரவாதம் ஆகியன தொடர்பாக ஆய்வுகளை நடத்தி வருகின்ற இலங்கையரான றொகான் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

விஸா தொடர்பாக இடம்பெற்ற சர்ச்சையை அடுத்து இந்தோனேஷியப் பொலிஸார் மத்தியில் உருவான சந்தேகத்தின் காரணமாகவே தான் கைது செய்யப்பட்டதாகவும் றொகான் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தத் தவறான அபிப்பிராயம் நீக்கப்பட்டு தான் வழமையாக ஆய்வுகளை நடத்திவந்த முருங்காஸ் தீவுகளில் தொடர்ந்தும் ஆய்வுகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முருங்காஸ் தீவுகளில் இதுபோல் எண்ணற்ற சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் அங்குள்ள வெளிநாட்டவர்களை பொலிஸார் தீவிரமாகக் கண்காணித்து வருவதாகவும் குறிப்பிட்ட அவர், தான் ஒரு பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று தவறாகக் கருதிவிட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட தான் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது உண்மை நிலவரங்களை அறிந்து விடுதலை செய்யப்பட்டதாகவும் அறிவித்துள்ளார்.

இவர் பயங்கரவாதம் தொடர்பான ஆய்வுகளை நடத்தி வருவதுடன் அல்கைதா இயக்கம் தொடர்பான நூல் ஒன்றையும் வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுற்றுலாப் பயணிகளுக்கான விஸாவுடன் இவர் ஆய்வுகளில் ஈடுபட்டிருந்தபோது பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாகவும் அவரை இந்தோனேஷியாவில் இருந்து வெளியேற்ற திட்டமிட்டுள்ளதாகவும் இந்தோனேஷியப் பொலிஸ் அதிகாரி ஒருவர் முன்னர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# வைத்தியசாலை மாடியிலிருந்து குதித்து இளைஞன் தற்கொலை

(கண்டி)

கண்டி வைத்தியசாலையின் மாடியிலிருந்து குதித்து இளைஞர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார். பிரஸ்தாப இளைஞர் கடந்த 28ஆம் திகதி ராகம பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் இவருக்கு சத்திரசிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

தற்கொலை செய்துகொண்ட இளைஞர் ராகம பகுதியைச் சேர்ந்தவர். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-8)

# வீரப்பன் வாழ்வும் வதமும்

## மீள் பார்வை

என். சொக்கன் 20


ஆனால், பிரச்சினை அவ்வளவு சீக்கிரத்தில் முடிந்துவிடவில்லை. வீரப்பனைச் சந்திப்பதற்காகக் காட்டுக்குச் சென்ற அரசுத் தூதர் 'நக்கீரன்' கோபால், மேலும் சில புதிய கோரிக்கைகளுடன் திரும்பி வந்தார்.

1. தமிழ்நாட்டுப் பள்ளிகளில், பத்தாம் வகுப்பு வரை தமிழில்தான் பாடம் சொல்லித் தரவேண்டும். இதற்கான சட்டம், உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்.

2. வாச்சாத்தி மற்றும் சின்னாம்பதி கிராமங்களில் கற்பழிப்புக் கொடுமைக்கு ஆளான அப்பாவிப் பெண்களுக்கு, நஷ்ட ஈடாக தலா பத்து இலட்சம் ரூபாய் வழங்கப்பட வேண்டும்.

வழக்கம்போல், வீரப்பனின் இந்தக் கோரிக்கைகளும், 'பரிவோடு' பரிசீலிக்கப்பட்டன. இதுபற்றி அவனுடன் பேசுவதற்காக, கோபால் மீண்டும் காட்டுக்குள் செல்வார் என்று அறிவிக்கப்பட்டது.

இதற்குள், ராஜ்குமார் கடத்தப்பட்டு இரண்டு வாரங்களுக்கு மேல் ஓடியிருந்ததால், வேறு வழிகளில் அவரை மீட்க முடியுமா அல்லது வேறு யாரையாவது தூதாக அனுப்பி வீரப்பனுடன் பேச்சுவார்த்தை நடத்தலாமா என்றெல்லாம் கர்நாடக அரசு சிந்திக்கத் தொடங்கியது.



இந்த சந்தர்ப்பத்தில்தான், ராஜ்குமாரை விடுவிப்பதற்கான முதல் தவணைப் பணம் (ஐந்து கோடி ரூபாய்) வீரப்பனுககு வழங்கப்பட்டதாக, தனது நூலில் சி. தினகர் குறிப்பிடுகிறார்.

ஆனால், வீரப்பனுக்கு இந்தத் தொகை போதவில்லையோ அல்லது மற்றக் கோரிக்கைகளை நிறை வேற்றப்படுமா என்கிற விஷயத்தில் அவனுக்கு சந்தேகமோ தெரியவில்லை. இந்த முறையும் அவன் ராஜ்குமாரை விடுவிக்க மறுத்துவிட்டான்.

இதனால், கர்நாடகத்தில் ராஜ்குமாரின் ரசிகர் மன்றங்களும், மற்ற இயக்கங்களும் பெரிய கலாட்டாக்களைத் திட்டமிட்டு நிறைவேற்றத் தொடங்கின. ஒரு சிறு வாய்ப்புக் கிடைத்தாலும், மிகப் பெரிய கலவரம் உருவாகக் கூடிய சூழல். ஆகவே, உடனடியாக, மிக உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும். இல்லையென்றால், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைச் சமாளிப்பது சாத்தியமில்லை என்கிற நிலைமை.

இந்தப் பிரச்சினைகள் எதுவும் வீரப்பனுக்குப் புரியவில்லை. அவன் ராஜ்குமாரை விடுவிக்க மறுக்கிறான் ஆனால் அதற்காக கர்நாடகத் தமிழர்கள் தாக்கப்படக்கூடாது என்றும் எதிர்பார்க்கிறான் இந்த இரட்டை நாடகத்தை இன்னும் எத்தனை நாள்களுக்குச் சமாளிக்க முடியுமோ தெரியவில்லை.

போதாக்குறைக்கு ராஜ்குமார் கடத்தப்பட்டதில் இருந்து கன்னடத் திரை உலகமே ஸ்தம் பித்துப் போய் நின்றிருக்கிறது. காட்டில் அவர் நல்ல உடல்நலத்தோடுதான் இருக்கிறார் என்று திரும்பத் திரும்ப சொல்லப்பட்டும் கூட மக்கள் அதை நம்பவில்லையோ என்னவோ மாநிலத்தில் பல அத்தியாவசியத் துறைகள் இயங்காமல் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இத்தனை பிரச்சினை களுக்கும் ஒரே ஒரு தீர்வுதான் வீரப்பனின் கோரிக்கைகளை முறைப்படி முழுமையாக நிறைவேற்று வது. ஆனால் அதைச் செய்யமுடியாதபடி ஒரு தடங்கல் இருந்தது.

வீரப்பன் சிறையிலிருந்து விடுவிக்க விரும்பும் அவனது தோழர்களின் மீது தடா தீவிரவாதத் தடுப்புப் பிரிவின் கீழ் வழக்குப் பதிவாகி இருந்தது. ஆகவே சுலபமாக ஜாமீன் கிடைப்பதற்கான சாத்தியங்கள் அடைபட்டிருந்தன.

ஆகவே அவர்கள் மீதான தடா குற்றச்சாட்டுக்களை விலக்கிக்கொள்ள முயன்றது கர்நாடக அரசு. வீரப்பனால் கொல்லப்பட்ட ஷகீல் அகமதுவின் அப்பா அப்துல் கரீம் அரசின் இந்த நடவடிக்கையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

ராஜ்குமார் கடத்தப்பட்டு கிட்டத்தட்ட ஒரு மாதம் கழிந்த பின் இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தின் விசாரணைக்கு வந்தது. இரு தரப்பு வாதங்களைக் கேட்ட பின் மேற்சொன்ன தடா கைதிகளை உடனடியாக விடுதலை செய்வதற்கு எந்த அவசியமும் இல்லை என்று உறுதியாக மறுத்துவிட்டது உச்ச நீதிமன்றம்.

ஆனால் அவர்களை விடுதலை செய்தால்தான் ராஜ்குமாரை வீரப்பன் விடுவிடுப்பான் என்று வாதாடியது கர்நாடக அரசு. ஒருவேளை அவன் ராஜ்குமாரை ஏதாவது செய்துவிட்டால் அதன்பின் கர்நாடக மக்களின் கோபத்தைச் சமாளிப்பது ரொம்ப சிரமம்.

கர்நாடக அரசின் இந்த வாதத்தை உச்ச நீதிமன்றம் ஏற்கவில்லை. மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. உங்களால் அது முடியாவிட்டால் பதவியை ராஜினாமா செய்துவிட்டுப் போங்கள் என்று நெற்றியடியாகச் சொல்லிவிட்டது.

இதனால் எஸ்.எம். கிருஷ்ணா தலைமையிலான கர்நாடக அரசுக்கு மிகவும் அவமானமாகி விட்டது. அதற்குமேல் வீரப்பனின் முக்கியமான கோரிக்கையை நிறைவேற்ற முடியாது என்கிற நிலைமை. இதை எப்படி வீரப்பனிடம் சொல்வது? சொன்னால் அவன் புரிந்துகொள்வானா? அல்லது இவர்களை விடுவித்தால்தான் ஆச்சு என்று பிடிவாதம் பிடிப்பானா? இனிமேல் ராஜ்குமாரின் நிலைமை என்னவாகும்?

இந்த சமயத்தில்தான் தமிழர் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த பழநெடுமாறனை வீரப்பனிடம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அனுப்பலாம் என்று ஒரு புதிய யோசனை முன்வைக்கப்பட்டது. நெடுமாறன் மீது வீரப்பன் மிகுந்த மரியாதை வைத்திருக்கிறான் என்பதால் அவரால் அவனைச் சமாதானப்படுத்த முடியும் என நம்பப்பட்டது. அவரும் இதற்குச் சம்மதித்தார்.

ஆனால், பழநெடுமாறனோ தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பகிரங்க ஆதரவாளர். ஆகவே, அவரைத் தூதராக அனுப்புவதில் கர்நாடக (காங்கிரஸ்) அரசுக்குச் சில தயக்கங்கள் இருந்தன என்றாலும், இப்போது அவர்களுக்கு வேறுவழியில்லை. எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்கிற நிலைமையில் இருந்த அவர்களால் இந்தப் புதிய முயற்சியை வெளிப்படையாக ஆட்சேபிக்க முடியவில்லை.

இந்த சமயத்தில் வேறொரு புதிய பிரச்சினை ராஜ்குமாரை வீரப்பன் கடத்தியபோது அவரோடு கடத்தப்பட்ட நாகப்பா என்ற உதவி இயக்குநர் வீரப்பனைத் தாக்கிவிட்டு அவனிடம் இருந்து தப்பி ஓடி வந்துவிட்டார்.

பரபரப்பான இந்தச் செய்தி வெளியானதும் கர்நாடக அரசும் பொதுமக்களும் இதன் விளைவுகள் எப்படி இருக்குமோ என்று பயந்தார்கள். நாகப்பா தப்பிவிட்ட கோபத்தை ராஜ்குமார் மீது வீரப்பன் காட்டிவிட்டால்? (நல்ல வேளையாக அப்படி எதுவும் நடக்கவில்லை) அது சரி, நாகப்பா எப்படித் தப்பினார்?

ராஜ்குமாரையும் அவரோடு கடத்தப்பட்டவர்களையும் வீரப்பன் தன்னுடைய நேரடிப் பொறுப்பிலேயே வைத்திருந்தான். ஏற்கனவே இதுபோன்ற முக்கியமான பொறுப்புகளை மற்றவர்களிடம் வீரப்பன் ஒப்படைத்த போதெல்லாம் அவனால் கடத்தப்பட்டவர்கள் தப்பிச் சென்றுவிட்ட மோசமான அனுபவம் அவனுக்கு உண்டு.

இந்த முறை அப்படி எதுவும் நடந்துவிடக்கூடாது என்பதற்காக அந்தக் காட்டுப் பகுதிக்குள் எங்கு இடம் மாறினாலும் ராஜ்குமார் முதலான நால்வரையும் தன்னோடு அழைத்துச் சென்றுவிட்டான் வீரப்பன்.

ராஜ்குமாரின் உதவியாளரான நாகப்பா, காட்டிலும் அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொண்டிருந்தார். இந்த வயதான காலத்தில் தன்னுடைய முதலாளியை வீரப்பன் இப்படி கஷ்டப்படுத்துகிறானே என்று அவருக்குக் கோபமாக இருந்தது.

*(தொடரும்)*

# வறுமையை ஒழிப்பதற்கு தொ.நு. வளர்ச்சி அவசியம்

(கொழும்பு)

சிங்களத்திலும் தமிழிலும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இணையத்தளங்களைப் பயன்படுத்துவதற்கும் இலங்கையர்களுக்கு வசதி அளிக்கும் வகையில் கணனி மின் கலங்களை உபயோகிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினதும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினதும் ஆசிகளோடு இந்த தேசிய முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

உள்ளூர் தேவைகளை நிறைவேற்றும் வகையில் முன்னேற்றம் வாய்ந்த விஞ்ஞான தொழில்நுட்ப உத்திகளை அறிமுகம் செய்வதன் மூலம் வறுமையை ஒழிக்க முடியும் என்று அமைச்சர் விதாரண தெரிவித்தார்.

இந்த முயற்சியில் தொண்டர் அமைப்புக்கள் ஆற்றிவரும் பங்களிப்பும் அரசாங்கத்துறை அமைப்புகளின் உதவியும் எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ளப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

2005 வருட அதிசிறந்த சிறு கண்டுபிடிப்பாளரை தெரிவு செய்வதற்காக இலங்கை பொறியியலாளர் நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தில் அமைச்சர் பேராசிரியர் விதாரண உரையாற்றும் போது இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். (ற-7)

# சாஹித்ய ரத்ன விருது டொமினிக் ஜீவாவுக்கு!

(கொழும்பு)

2005ஆம் ஆண்டுக்கான அரச இலக்கிய விருது 7 தமிழ் படைப்பாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது. தமிழ் இலக்கியத்திற்கான சாஹித்ய ரத்ன விருது இவ்வாண்டு டொமினிக் ஜீவாவுக்கு வழங்கப்படும்.

கவிதைத் துறைக்கான விருதுகள் "பிணம் செய்யும் தேசம்" எனும் கவிதைத் தொகுப்பை எழுதிய இளைஞர் இளைய அத்துலாவிற்கும் "ஓவியம் வரையாத தூரிகை" எனும் கவிதைத் தொகுப்பை எழுதிய அனாறுக்கும் வழங்கப்படவுள்ளது.

சிறுகதைத் துறைக்கான விருதினை "முகவரியைத் தேடுகிறார்கள்" எனும் சிறுகதையைப் படைத்த சோ.இராமேஸ்வரனுக்கும், "பச்சைவயல் கனவு" எனும் நாவலை எழுதிய தாமரைச்செல்விக்கு நாவலுக்கான இலக்கிய விருதும் வழங்கப்படவுள்ளது.

நாடகத் துறைக்கான இலக்கிய விருது "இமயம்" நாடகததை எழுதிய அராலியூர் சுந்தரம்பிள்ளைக்கும், சிறுவர் இலக்கியத்திற்கான விருது "மாவீரன் புள்ளிமான்" சிறுவர் இலக்கியத்தைப் படைத்த ஓ.கே. குணநாதனுக்கும ஆய்வு நூலுக்கான இலக்கிய விருது மட்டக்களப்பு நாட்டாரியல் எனும் ஆய்வு நூலைத் தொகுத்த வ.சிவசுப்பிரமணியத்திற்கும் வழங்கப்படவுள்ளது.

அத்தோடு ஆங்கில இலக்கியத்திற்கான விருது இவ்வாண்டு 6 படைப்பாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது. இவர்களில் "லில்லிஜ்" என்ற சிறுகதையை எழுதிய ஆமினா ஹுசைனுக்கு சிறுகதைக்கான இலக்கிய விருது வழங்கப்படும்.

விருது பெறும் அனைத்துப் படைப்பாளிகளும் இலங்கையைச் சேர்ந்தவர்கள். இவர்களில் ஆங்கில இலக்கியத்திற்கான சாஹித்ய ரத்ன விருது ஆதர்சி கிளாக்கிற்கும் சிங்கள இலக்கியத்திற்கான "சாஹித்ய ரத்ன" குணதாசா அமரசேகரவிற்கும் வழங்கப்படவுள்ளன.

மேற்படி அரசு இலக்கிய விருது வழங்கும் விழா எதிர்வரும் 28ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கலாசார அலுவலகள் மற்றும் தேசிய மரபு உரிமைகள் அமைச்சர் மஹிந்த யாபா சுபேவர்தன தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-7)

# பல்கலையில் பொங்குதமிழ் ஏற்பாட்டுக் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் பொங்குதமிழ் ஏற்பாடு பற்றிய கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

நாளை புதன்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் முதலாவது கூட்டம் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு சகல தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்கத் தலைவர் ,பொருளாளர் ,செயலாளர் சங்கச் செயற்குழு உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜா கேட்டுக்கொண்டுள்ளார்.

அடுத்த எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 3.00மணிக்கு நடைபெறவுள்ள கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ,பல்கலைச் கழக பீடாதிபதிகள்,நூலகர்கள், பதிவாளர்கள், நிதியாளர்கள், பொறியியலாளாகள்,துறைத்தலைவர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், விரிவுரையாளர்கள்,உதவி நூலகர்கள், போதனை சாரா ஊழியர்கள் எனப் பல்கலைக் கழக ஆளணியினர் அனைவரும் கலந்துகொண்டு பொங்குதமிழ் ஏற்பாடு பற்றி கலந்தாலோசிக்க உள்ளனர்.

இக் கட்டடத்திற்கு பல்கலைக்கழக ஆசிரியர்கள், ஊழியர்களும் கலந்துகொள்ளும் பொருட்டு அவர்கள் அத்தருணம் கடமையில் இருந்து விடுவிக்கப்படுவார்கள் என பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்துள்ளார்.(த-9)

# வாகன இறக்குமதிக்கு அனுமதி

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 35 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு மேற்படாத பெறுமதி கொண்ட வாகனங்களை இறக்குமதி செய்து கொள்வதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 225 உறுப்பினர்களுக்கும் இவ் வாகனங்களை இறக்குமதி செய்து கொள்வதற்கான வாய்ப்பு கிட்டும்.

பாராளுமன்ற விவகார அமைச்சரான விஸ்வ வர்ணபாலவினால் இவ் யோசனை அமைச்சரவைக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-4)

ஊழிபெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார் -குறள்

வலம்புரி

# பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராவாரா?

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை நிறுத்துவதென கட்சி முடிபு செய்திருந்தது.

கட்சியின் முடிபு அறிவிக்கப்பட்டதும் தனது வெற்றியை தானே நிர்ணயிக்கவேண்டுமென்பது போல் பிரதமர் மகிந்தவின் செயற்பாடு அமைந்துள்ளது.

ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்வதன் மூலமே தனது வெற்றியை உறுதி செய்துகொள்ள முடியுமென்ற முடிபை எடுத்துக்கொண்ட அவர், ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு அவர்களுடன் உடன்பாடும் செய்துகொண்டார்.

பொதுக்கட்டமைப்பை ரத்துச்செய்தல் என்ற ஜே.வி.பியின் நிபந்தனைக்கு உடன்பட்ட மகிந்தராஜபக்ஷவே இந்த நாட்டின் முதலாவது சமாதான விரோதியாக கணிக்கப்படவேண்டியவர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தை வழங்குவதில் அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தக்கூடிய பொதுக்கட்டமைப்பை ரத்து செய்யும் ஒருவரால் எந்த விதத்திலும் சமாதானத்தை அடைய முடியாது.

நான் ஜனாதிபதியானால் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் நேரடியாகப் பேச்சு நடத்துவேன் என கூறிக்கொள்ளும் மகிந்தவிற்கு இனப்பிரச்சினையின் தாற்பரியம் எதுவுமே தெரியாதென்று எண்ணத்தோன்றுகிறது.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் பேச்சு நடத்துவதென்பது தனித்து மகிந்த மட்டும் முடிவெடுத்து விடமுடியாது.

மகிந்தவுடன் பேச்சு நடத்துவதா என்ற முடிபை தலைவர் பிரபாகரனும் எடுக்கவேண்டும்.

பொதுக்கட்டமைப்பை நீக்கும் நிபந்தனைக்கு தலைவணங்கும் ஒருவருடன் புலிகளின் தலைமை பேச்சுநடத்துவதென்பது ஒருபோதும் சாத்தியப்படமாட்டாது.

இதனை சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களை பார்வையிடுவதற்காக ஜே.வி.பியுடன் சேர்ந்து வந்த பிரதமர் மகிந்தவுக்கு மக்கள் வழங்கிய வரவேற்பு எப்படியானதென்பதை அவர் அனுபவித்துக்கொண்டவர்.

அத்தகைய ஒருவர் பொதுக்கட்டமைப்பை ரத்துச்செய்யும் ஜே.வி.பியின் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னர் 'நான் ஜனாதிபதியானால் விடுதலைப்புலிகளின் தலைவருடன் நேரடிப்பேச்சு நடத்துவேன்' என கூறுவது எந்தளவிற்கு உடன்பாடனதென்பதை மக்களே தீர்மானிக்கவேண்டும்.

பொய் உறுதி உரைகளை வழங்கி- மக்களை ஏமாற்றி அதிகாரத்தில் அமர்ந்துவிடத் துடிக்கும் மகிந்தபோன்ற பச்சோந்தி அரசியல்வாதிகளுக்கு மக்கள் தகுந்த பாடம் படிப்பிக்கத் தவறின் நிலைமை மோசமடைவது தவிர்க்க முடியாததாகி விடும்.

அதேவேளை சமாதான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும், நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த விடுதலைப்புலிகளுடன் பேச்சுநடத்த வேண்டுமென அடிக்கடி கூறிக்கொள்ளும் ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவிற்கும் தார்மீகப் பொறுப்பு உண்டு.

அதாவது ஜே.வி.பியுடன் உடன்படிக்கை செய்து கொண்டு சமாதானத்திற்கு விரோதமாக நடக்கும் மகிந்தவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தாது விடுவதே அந்தப்பொறுப்பாகும்.

இதனைச் செய்வதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி தயாராகி விட்டதென்பது தற்போதைக்கு உறுதியாகிவிட்டது. ஆக ஜனாதிபதி வேட்பாளர் என்ற பதத்தை பெறாமலே மகிந்தவின் அரசியல் செல்வாக்கு அஸ்தமிக்கப்போவது உறுதியாகிவிட்டது.

# மஹிந்தவுக்கு மக்களின் ஆதரவு கிடைப்பதை தடுக்க ஐ.தே.க முனைவு

## அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டில் பயங்கரமான சூழ்நிலை ஒன்றை உருவாக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் விடுதலைப்புலிகளும் முயற்சி மேற்கொண்டு வருவதாக அரசியல் அவதானிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் பேராதரவு கிடைத்துவிடும் என்பதைச சகித்துக்கொள்ள முடியாத இந்த இரண்டு அமைப்புக்களும் மக்கள் மத்தியில் பயப்பிராந்தி ஒன்றை ஏற்படுத்துவதற்கு முயற்சி மேற்கொண்டு வருகின்றன என்று சட்டத்தரணி சம்பத் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மற்றுமொரு சட்டத்தரணியான சம்மானை பத்மசேகர கருத்துத் தெரிவிக்கையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், ஜே.வி.பிக்கும் இடையே கைச்சாத்திடபபட்ட உடன்படிக்கை குறித்து மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களைப் பரப்புவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு ஆதரவான ஊடகங்களைப பயன்படுத்தி வருகிறது என்று குற்றம்சாட்டியுள்ளார்.

அரசியல் தீர்வு ஒன்றை காண்பதற்காக விடுதலைப் புலிகளோடு நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதாக உறுதியளித்துள்ள மஹிந்த ராஜபக்ஷ கைச்சாத்திட்ட உடன்படிக்கையினால் நாட்டில் எவ்வாறு அச்சுறுத்தல்கள் ஏற்படும் என்றும் பத்மசேகர வினா எழுப்பினார். (த-7)

# பொருளாதார சீர்குலைவுக்கு கூட்டமைப்பு அரசே காரணம்

(கொழும்பு)

அறுவடை செய்யப்படும் நெல்லைக் கொள்வனவு செய்வது தொடர்பாக அரசாங்கத்திடம் எவ்வித தேசிய செயற்திட்டமும் இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்கின்றது.

கூட்டமைப்பு அரசாங்கம் மக்களை ஏமாற்றி விவசாயிகளை சிரமங்களுக்கு உள்ளாக்கி இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இணக்கப்பாடு போன்று விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் நிலைமையைக் காணமுடியவில்லை என்று பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அதேவேளை, ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் மிகவும் சிக்கலானது என்று குறிப்பிட்ட அவர்,சமத்துவ பொருளாதார முறை சிக்கலானது என்றும் தெரிவித்தார்.

இந்த நிலையில் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள பல வெறுமனே வார்த்தைகளால் ஆனது.

நாட்டின் பொருளாதாரம் இன்று முழுமையாக சீர்குலைந்துள்ளது. இந்த நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை உறுதியாக கொண்டு செல்வதற்கு கூட்டமைப்பால் முடியாது. மா,அரிசி போன்ற பொருட்கள் அரசாங்கத்தால் இறக்குமதி செய்யப்பட்டதால் அம்பாறை போன்ற மாவட்டங்களில் நாட்டரிசியை 9 ரூபாவிற்கு கூட விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

இன்று முழு உலகையும் எடுத்துக்கொண்டால் இந்தியா, பாகிஸ்தான், சிங்கப்பூர் ஆகிய நாடுகள் உலக மயமாக்கல் பொருளாதார முறையில் செல்ல முறபடும்போது இந்த ஒப்பந்தத்தில சீனாவின் பொருளாதார முறைமை கூட கவனத்தில் கொள்ளப்படவில்லை.

உலகில் எங்கும் காணப்படாத பொருளாதார வார்த்தைகள் மட்டுமே இதில் காணப்படுகின்றது. பொருளாதார சிக்கலை ஏற்படுத்தும் ஒப்பந்தமாகவே இது காணப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-9)

# கிழக்கின் அபிவிருத்திப் பணிகளுக்கு அமெ.33 மில்லியன் டொலரை வழங்கும்

(கொழும்பு)

சிதைவடைந்த துறைமுகங்களையும் மொழிப்பயிற்சி பாடசாலைகளையும் அறுகம்குடாவையும் 33 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் புனரமைக்கவுள்ளதாக அமெரிககா அறிவித்துள்ளது.

இதுபற்றி அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளதாவது,

அறுகம்குடாவிற்கு மேலாக 700 மீற்றர் பாலம் ஒன்று அமைக்கபபடவுள்ளது.

இதனால் சுனாமியால் பாதிக்கப்பட்ட கிழக்கில் பெருமளவானோர் நன்மையடைவர்கள்.யு.எஸ்.எயிட் நிறுவனமே இதனை நடாத்துகிறது. இதற்கான முன் கட்ட வேலைகள் இவவருட முடிவிற்குள் பூர்த்தியாகும். அதன் பின் முதல் திட்டம் 12 மாதங்கள் கடந்தே ஆரம்பமாகும்.

இலங்கையின் எதிர்காலம் குறித்து அமெரிக்க மக்கள் கவலைப்படுகின்றார்கள். அத்துடன் தெற்கு,கிழக்குக் கரையோரப் பகுதிகளிலும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இலங்கையில் குறைந்தது 5 நிறுவனங்களை உள்ளடக்கி முதல் 3 பகுதி புனரமைப்புகளும் முன்னெடுக்கப்படும்.

பொத்துவில் பிரதேசத்தை சூழவும் உல்லாசப் பிரயாணத் துறையும் அபிவிருத்தி செய்யும் பணி யு.எஸ்.எயிட் நிறுவனத்தால் முன்னெடுக்கப்படவுள்ளது. மொழிப்பயிற்சி நிறுவனங்கள் 14 நிறுவப்படவுள்ளன.இவை அனைத்தும் நவீன தொழில்நுட்ப முறையில் அமைநதிருக்கும் என அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ற-6)

# சுகாதாரத்துறை நடவடிக்கைகளுக்கு 20 கோடி டொலர் உதவி

(கொழும்பு)

சுனாமி அனர்த்த புனரமைப்புத் திட்டத்தின் கீழ் சுகாதாரத் துறை நடவடிக்கைகளுக்கென வாக்குறுதி அளிக்கப்பட்ட உதவித் தொகை 20 கோடி டொலர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது என ரவரன் அமைப்பு தெரிவித்துள்ளது.

எதிர்பார்க்கப்பட்ட நிதி உதவியிலும் பார்க்க இந்தத் தொகை இரண்டு மடங்காகும்.

சுகாதார அமைச்சின் இணையத்தளத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பிரசார நடவடிக்கைகளே இதற்கான காரணம் என்று சுகாதாரத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பெற்றுக்கொள்ளப்படும் நிதி உதவி சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்படும்.

இதற்கென சுகாதார அமைச்சுடன் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்கள் 40க்கும் அதிகமான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற-7)

## இலங்கையில்

# சுமார் 2 இலட்சம் சிறுவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதில்லை

(கொழும்பு)

பாடசாலைக்குச் செல்ல வேண்டிய வயதில் உள்ள சுமார் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லையென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது மிகவும் கவலைக்குரியதொரு விடயமென்று கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டிமெல் தெரிவித்துள்ளார்.

கலவி அமைச்சில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆசியாவில் இலங்கை எழுத்தறிவில் முதன்மையான இடத்தில் காணப்படுகின்றது. இலங்கையில் எழுத்தறிவு வீதம் 1.8 ஆகும்.

எவ்வாறாயினும் 6 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட சுமார் 200,000ற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாடசாலைகளுக்குச செல்வதில்லை. இவர்களில் 50,000ற்கும் மேற்பட்ட சிறுவர்கள மேல்மாகாணத்திலேயே காணப்படுகின்றனர் எனவும் அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டார். (ற-8)

# மஹிந்தவுக்கு எதிராக சுதந்திரக் கட்சி சூழ்ச்சி?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தேசிய அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதியினரே இதற்கு பொறுப்பேற்க வேண்டும் என அந்த அமைப்பின் தலைவர் சட்டததரணி எஸ்.எல்.குணசேகர தெரிவித்துள்ளார்.

தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் கொழும்பில் நேற்று நடாத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத தெரிவித்தார்.

ஏற்கனவே நடைபெற்றவொரு ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் ஹெக்டர் கொப்பேகடுவ ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டு பின்னர் அவர்களினாலேயே தோற்கடிக்கப்பட்டார். தற்பொழுது இவ்வாறான நடவடிக்கையிலேயே மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து-8)

## தினசரி தியானம்



### விவேகச் சிந்தனைகள்

ஓங்கி அடிப்பது எளிது. ஆனால் அடிக்காமல் அடங்கி இருப்பது மிகக் கடினமானது. "இறைவா! உம்மிடமே தஞ்சம் அடைகிறேன்" என்று கூறிவிட்டு அவன் செயலை எதிர்பார்த்துக் காத்திருப்பது அதை விடக் கடினமானது.

சுவாமி விவேகானந்தர்

# வடமராட்சியில் எழுச்சிமாநாடு

(திருநெல்வேலி)

பொங்குதமிழ் தொடர்பான முன்னோடி எழுச்சிமாநாடு வடமராட்சி இந்துக்கல்லூரியில் நேற்று பிற்பகல் 3மணிக்கு இடம்பெற்றது.

இதில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான இ.சிவநேசன்,கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டின் அடுத்த கட்டமாக வடமராட்சி ஆசிரியர்கள் , அதிபர்கள் உடனான சந்திப்பொன்றை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-43)

# தமிழ்ச்செல்வனுடன் நாளை சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை நாளை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் காலை 10 மணிக்கு இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது.

கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இச்சந்திப்பில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-4 ,9)

# 'விடுதலைப்புலிகள்' தொகுப்பு இணையத்தில்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் அமைப்பின் அதிகாரபூர்வ நிலைப்பாட்டை தாங்கி 1984 ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி ஆரம்பித்த விடுதலைப் புலிகளின் ஏட்டினது 125 குரல்களும் தற்போது முழுமையாக இணையத்த்ளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

**www.viduthalaapulikal.com** என்ற இணைய முகவரியில் இதனைப் பார்வையிட முடியும். (ந-04)

# யாழ்.கல்வி வலயத்தில் பட்டதாரி பயிலுநர்கள் மறியல்



(யாழ்ப்பாணம்)

பட்டதாரிப் பயிலுநர் திட்டத்தின் கீழ் கடந்த ஒருவருடகாலமாக பயிற்சியினைப் பெற்றுக் கொண்ட போதிலும் தம்மை பட்டதாரி ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்காததை ஆட்சேபித்து பாதிக்கப்பட்டவர்கள் நேற்று யாழ். வலயக்கல்விப்பணிமனையின் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இப் போராட்டத்தில் பாதிக்கப்பட்ட 500ற்கு மேற்பட்ட ஆசிரிய பயிலுநர்கள் பங்கு பற்றினர். தமக்கு நியமனம் பெற்று தரும் வரை கதவடைப்பு போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபடவுள்ளதாக பட்டதாரி பயிலுநர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது நிலைமையை விளக்கும் மகஜரை யாழ். அதிபரிடமும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகப் பொறுப்பாளரிடம் கையளித்துள்ளனர்.(ந-19)

# டென்மார்க்கில் பயிற்சிபெற ஊடகவியலாளர் விண்ணப்பிக்கமுடியும்

(யாழ்ப்பாணம்)

டென்மார்க் அரசானது இலங்கை ஊடகவியலாளர்களுக்கான ஆறு வாரகால ஊடகப்பயிற்சி ஒன்றை 2006 பெப்பிரவரி 17ஆம் திகதி முதல் மார்ச் 17ஆம் திகதிவரை டென்மார்க்கில் வழங்க முன்வந்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் பெற்றுக்கொள்ளமுடியும். விண்ணப்ப இறுதித்திகதி ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி என நிலைய இணைப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அறிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் பின்வரும் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

◆இரண்டு வருடங்கள் ஊடகவியலாளர்களாக அல்லது ஊடகப் பயிற்றுவிப்பாளர்களாக பணியாற்றிய அனுபவம்.

◆மேற்படி பயிற்சியை ஆங்கிலத்தில் கற்கவும் சரளமாக ஆங்கிலத்தில் பேசும் தகைமை

◆கணனியில் வேட், அவுட்லுக் ,வின்டோஸ் ஆகிய நிகழ்ச்சிகளை கையாளும் தகைமை

◆இலங்கைக்கு திரும்பிய பின்னர் பெற்ற அறிவை பயன்படுத்துவதற்கான அறிக்கை

மேற்படி தகைமையைக் கொண்டவர்கள் விண்ணப்பப் படிவத்தோடு பின்வரும் விடயங்களை சமர்ப்பிக்கவேண்டும். ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட சுயவிபரக்கோவை , பயிற்சியில் பங்குபற்றுவதற்கான நோக்கம் பற்றிய விளக்கம் (ஆங்கிலத்தில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல்) பணியாற்றும் நிறுவனத்திடம் இருந்து லீவுக்கடிதம். (ந)

### எமது பலத்தை...

கத்தின் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்ட போராளிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றவுடன் ,யாழ்.குடாநாட்டில் மக்களின் இயல்பு வாழ்வுக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய வகையில் சில கும்பல்கள் மீண்டும் தமது நாசகாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவற்றை நாம் மக்களின் ஒத்துழைப்புடன் இனங்கண்டு அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளோம். குடாநாட்டு மக்கள் தமது தேவையை பொறுத்து எம்மைச் சந்திப்பதற்காக முகமாலையில் மக்கள் தொடர்பகமொன்றையும் அமைக்கவுள்ளோம்.

யாழ்.குடாநாட்டு மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு தமிழரது சுயநிர்ணய உரிமையை ஏற்குமாறும்,தமிழர் தாயகப்பகுதியில் தற்போது நடைமுறையில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசை அங்கீகரிக்குமாறும் சர்வதேச சமூகத்திடம் குரல்கொடுத்தால் அதற்கு சர்வதேச சமூகம் நிச்சயமாக மதிப்பளித்தாகவேண்டும்.

இதற்காக யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் தலைமையின் பொது அமைப்புக்கள் , தொழிற்சங்கங்கள் ,கல்வி நிறுவனங்கள், திணைக்களங்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள பொங்குதமிழ் எழுச்சிப்பிரகடனத்தில் குடாநாட்டு மக்கள் கலந்துகொண்டு தமது உணர்வை வெளிப்படுத்துமாறும் இளம்பரிதி கேட்டுக்கொண்டுள்ளார். (ந-19)

### பொதுக்கட்ட...

விசாரணை நடைபெற்றது.

பொதுக்கட்டமைப்பினை தடைசெய்ய கோரி மொத்தமாக 6மனுக்கள் [illegible] செய்யப்பட்டுள்ளன. இதில் மூன்று மனுக்களுக்கு எதிராக பிரதிவாதிகளால் ஆட்சேபனை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படுவதற்கு முன்னர் எஞ்சியுள்ள மனுக்களுக்கு எதிராகவும் ஆட்சேபனை மனுக்களை தாக்கல் செய்யுமாறு பிரதம நீதியரசர் உத்தரவிட்டுள்ளார். (ந-4)












# ஒருமாதத்திற்கு முன்னரும் கொலை முயற்சியில் இருந்து கதிர்காமர் தப்பியிருந்தார்

சிறிலங்கா முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொல்லப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் கொலை முயற்சி ஒன்றிலிருந்து உயிர்தப்பியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இத்தகவலை கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

லக்ஸ்மன் கதிர்காமரின் அயல் வீட்டவரான தளையசிங்கத்தின் வீட்டிலிருந்து அமைச்சர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட துப்பாக்கிதாரிகள் ஒரு மாதத்திற்கு முன்னரும் அதே இடத்திலிருந்து அமைச்சர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முற்பட்டுள்ளனர்.

எனினும் அன்று அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவு அதிகாரியொருவர் அமைச்சரின் வீட்டுத் தோட்டத்திலிருந்து தளையசிங்கத்தின் வீட்டு மாடி ஜன்னல் பக்கமாக எதேச்சையாக தனது பார்வையைத் திருப்பியுள்ளார்.

பாதுகாப்பு அதிகாரி தங்களின் பக்கம் பார்வையைத் திருப்பியதையடுத்து கொலை யாளிகள் தங்களின் முயற்சியைக் கைவிட் டுள்ளனர்.

பாதுகாப்பு அதிகாரியின் பார்வை தாங்கள் இருந்த பக்கம் திரும்பியதையடுத்து கொலையாளிகள் துப்பாக்கியையும் ஏனைய பொருட்களையும் அதே இடத்தில் போட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளனர். எனினும் பாதுகாப்பு அதிகாரிகள் தங்களின் திட்டங்கள் பற்றி எதனையும் அறிந்திருக்கவில்லை என்பதை இருதினங்கள் கடந்தபின் கொலையாளிகள் புரிந்து கொண்டனர்.

மீண்டும் தங்களின் கொலை முயற்சிக்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்துள்ளனர் இச்சம்பவம் நிகழ்ந்து ஒரு மாதத்திற்குப் பின்னரே கதிர்காமர் கொல்லப்பட்டார்.இக் கொலை தொடர்பில் மேற்கொள்ளப் பட்டுவரும் உயர்நிலை விசாரணைகளிலிருந்து இத்தகவல் வெளியாகியுள்ளன

இவ்விசாரணை அறிக்கையின் பிரதியொன்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. வெளிநாட்டமைச்சினால் அதன் பிரதிகள் வெளிநாடுக்கும் சிறிலங்கா தூதரகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

இப் படுகொலைக்கு காரணம் விடுதலைப் புலிகளேஎன வெளிநாடுகளுக்கு எடுத்துக் கூற இவ்வறிக்கை பயன்படுத்தப்படவுள்ளதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதிர்காமரின் படுகொலைக்கு சார்ள்ஸ் என்னும் புனைபெயரில் இயங்கும் விடுதலைப்புலிகளின் உளவுப்பிரிவுப்பொறுப்பாளர் பொட்டு அம்மான் என்றும் அவர் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பை தனக்கு விசுவாசமான விநோதன் என்பவரிடம் ஒப்படைத்துள்ளார் என்றும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதற்கென தளையசிங்கத்தின் வீட்டுத் தோட்டக்காரரான முத்தையா சகாதேவன் எனப்படும் தேவனின் உதவியை விநோதன் என்பவரே பெற்றுள்ளார்.

தேவன் என்பவர் ஒருதடைவை கதிர்காமரின் வீட்டில் புல் வெட்டும் பணியையும் செய்திருப்பதாக கூறப்படுகிறது. அத்துடன் அமைச்சரின் வீட்டுக்கு அருகில் இருக்கும் தூதரகம் ஒன்றின் அதிகாரியின் வீட்டிலும் அவர் வேலை செய்துள்ளார்.

அமைச்சர் கதிர்காமரை படுகொலை செய்வதற்கு ஏற்ற இடம்மொன்றை வெகுகாலமாகத்தேடிய விடுதலைப்புலிகள் அதற்கு உகந்த இடம் தளையசிங்கத்தின் வீட்டுதான் என்பதை உறுதிப்படுத்திய பின்னர் அதற்கான நடவடிக்கைகளை படிப்படியாக மேற்கொண்டுள்ளனர் என அவ்வூடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (ந-4)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.